உ

# அருள் ஒளி



## சித்திரை சிறப்பு மலர்

வெளியீடு

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை

2013


மூதறிஞர் பண்டிதர் கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின்

## ‘சைவக் களஞ்சியம்’

# நூல் வெளியீட்டு விழா





PUBLIC LIBRARY
JAFFNA



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்

சித்திரை மாத சிறப்பு மலர்
2013

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

பதிவு இல. : QD / 74 / NEWS / 2006Y

## இந்து ஆராய்ச்சியின் எதிர்காலம்

ஈழத்திருநாட்டின் வரலாற்றில் இந்து மதம் பெற்ற முதன்மையை மறைப்பதற்கு அரசாங்கமும், அரச சார்புடைய ஆய்வாளர்களும், பிறமதங்களைப் பரப்பும் பணியில் ஈடுபடுபவர்களும் வேமாகச் செயற்பட்டு வருவதை யாவரும் அறிவர். இந்நிலையில் இந்து மதத்துறைசார் அறிஞர்களின் பங்களிப்பு திருப்தியாகவில்லை. மிக இக்கட்டான காலகட்டத்தில் இந்து சமயத்துறை சார்ந்த அறிஞர்கள் மௌனமாக இருப்பது வேதனை தருகிறது. குறிப்பாக பல்கலைக்கழக வரலாற்றுத்துறை, இந்து நாகரீகத்துறை அறிஞர்கள் உண்மை வரலாற்றை வெளிப்படுத்தல் காலத்தின் கட்டாய கடனாகும். பல ஊர்களுக்கு புதிய பெயர்ப்பலகை நாட்டுதலும், புது வரலாறு வெளிப்படுத்துவதும் அதிர்ச்சி தரும் செய்தியாகும். கிழக்கிலங்கையில் தொடங்கிய இச் செய்கை யாழ்ப்பாணத்தில் மாதகல், கீரிமலை வரை தொடர்ந்துகொண்டிருக்கிறது. அரசியல்வாதிகள் மட்டுமல்ல, அறிவியல்சார் அறிஞர்கள் வரலாற்றைத் திரிபுபடுத்துவதைக் கண்டும் காணாது போல் இருப்பது வரலாற்றுத் தவறாகும். பேராசிரியர் பத்மநாதன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் போன்ற அறிஞர்கள் ஒரு காலத்தில் வரலாற்றுத் திரிபு தொடர்பாக குரல் கொடுத்தார்கள். இன்றைய தலைமுறை ஆய்வாளர்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்டாவிடில் அர்த்தமில்லை. அகில இலங்கை இந்து மாமன்றம்,

இந்து ஆராய்ச்சித்துறையை வலுப்படுத்துவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்து ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கி ஆய்வாளர்களை கூவி அழைத்தவண்ணமாகவுள்ளது. ஆய்வாளர்கள் முன்வந்து செயற்படுவதற்கான வேகம் போதாமல் உள்ளது. தந்திரிமலை தொடங்கி கீரிமலை வரை வரலாறு மாற்றப்படுகிறது. பல இந்துக் கோவில்களின் நிலம் பறிக்கப்பட்டு குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. மன்னார் மாவட்டத்தில் சைவப் பாரம்பரியமான இடங்களில் பிறமத அடையாளங்கள் நிறுவப்பட்டு நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

இந்து நாகரீகத்துறையின் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறையாக நாம் அனைவரும் இருத்தல் அவசியம். வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றிப் பின் மாகாண பிரதிச் செயலாளராகப் பணியாற்றும் உயர்திரு ப. விக்கினேஸ்வரன் அவர்கள் சமீபத்தில் பெறுபேறுகளின் நிலையில் இந்து நாகரீகம், இந்து சமய பாடப் பெறுபேறு மிக வீழ்ச்சி அடைந்துள்ளமை குறித்து கவலை தெரிவித்துள்ளார். இத்துறையில் பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர் தொகையும் குறைந்து செல்வதை பல்கலைக்கழக பேராசிரியர்களும் வெளிப்படுத்தி வருகிறார்கள். இவ்விடயம் தொடர்பாக அனைவரும் அக்கறை செலுத்தவேண்டும். மேலை நாட்டவர்கள் இந்துமதம் தொடர்பாக ஆர்வத்துடன் ஆராய்ந்து கற்றுவரும் வேளை இம்மதம் சார்ந்தவர்கள் இத்துறைசார் அறிவில் ஆர்வம் காட்டாது விடுவது மிகவும் ஆபத்தானது. இவ்விடயம் தொடர்பாக அனைவரும் விழிப்படைய வேண்டும்.

- ஆசிரியர்

# இறைவனின் செயல்கள் நன்மைக்கே...

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

ஒரு ஸ்தாபனத்தின் தலைவர், செய்ய வேண்டிய பணிகளை அட்டவணைப் படுத்தி, உரிய ஆட்களிடம் ஒப்படைக் கிறார். அவ்வாறு செய்யும்போது ஒரு சிறந்த தலைவர், ஒவ்வொரு பணியையும் மிகச் சிறப்பாக ஆற்றுவதற்குத் தகுதியும், தகைமையும் செயல்திறனும் கொண்ட பொருத்தமான ஒருவரிடம் ஒப்படைப் பார். அதனை இடையிடையே கண் காணித்துக் கொள்வார்; ஆனால் குறுக்கீடு கள், தலையீடுகள் செய்வதில்லை. பணியை ஆற்றுபவர், சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்படுவதால், உரிய கால எல்லைக்குள் பணியும் நிறைவேற்றப் பட்டுவிடுகிறது; உற்பத்தியும் அதிகரிக் கிறது. அத்துடன் செய்து முடித்துவிட்டோமே என்ற மகிழ்ச்சியும் திருப்தியும் எல்லோ ருக்கும் கிட்டுகின்றன. பணியாளர்களின் செயல்திறமைகளில் நம்பிக்கை வைத்துப், பணிகளை ஒப்படைத்து, தலையீடு இன்றி, சுதந்திரமாகத் தொழிற்பட அனுமதித்தமை யினால்தான் யாவும் இனிது நிறை வேறியது. சிறந்த தலைமைத்துவம் எந்த அளவிற்கு உற்பத்திப் பெருக்கத்துக்கும், பணியாளர் நல்லுறவுக்கும் வழிவகுக் கின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

வள்ளுவப் பெருந்தகை இதனை ஒரு குறள் மூலம் விளக்குகிறார்.

*"இதனை இதனால்இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்"*

என்பதே அக்குறள். இந்தச் செயலை, இன்ன காரணத்தால், செய்து முடிப்பதற்கு மிகப் பொருத்தமானவன் இவன் என் பதை ஆராய்ந்து துணிந்து, அச் செயலைச் செய்யுமாறு அவனிடமே விட்டுவிட வேண்டும் என்பது அதன் பொருள். ஒரு சிறந்த தலைமைத்துவம் இவ்வாறு தான் அமையவேண்டும் என்பதை இன்றைய முகாமைத்துவமும் ஒப்புக் கொள்கிறது.

தலையீடுகள், குறுக்கீடுகள் அடிக்கடி எழுவதற்கு அவநம்பிக்கைதான் காரணம். தலைவர், தமது பணியாளர்களின் திறமையில் சந்தேகம் கொண்டால், இப்படிப்பட்ட தலையீடுகளில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாமல் போய்விடுகின்றன.

நாமும் இறைவனிடம் எங்களுக்காகச் சில பணிகளைச் செய்யும்படி கேட் கின்றோம். அவற்றுள் சிலவற்றை நிறை வேற்றி வைக்கிறார். அப்பொழுது நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அவரில் நம் பிக்கை கொள்கின்றோம். சில சமயங் களில் நாம் கேட்பதை, இறைவன் நிறை வேற்றி வைப்பதில்லை. அப்பொழுது இறைவனில் அவநம்பிக்கை கொள்கி றோம்; அவனைப் பலவாறாக வைதும் விடுகிறோம். எம்மால் செய்யக்கூடிய செயல்களை நாம் செய்துவிட்டு, நம்மைப் பாராட்டியும் கொள்கிறோம். இது இறை வன் செயல், நாம் வெறும் கருவியே என்று நினைக்கக்கூட மனம் வருவதில்லை. எம்மால் ஆற்றமுடியாதவற்றை இறை வனிடம் ஒப்படைத்துவிட்டு, "இறைவா, என் செயலால் ஆவது ஒன்றில்லை,

எல்லாம் உன் செயலே" என்று கூறி விடுகிறோம். கடவுளிடம் நம்பிக்கையும், அவநம்பிக்கையும் மாறி மாறி எமக்கு ஏற்படுவதால்தான் நமக்குச் சங்கடங்கள் உண்டாகின்றன. இறைவனுக்குத் தெரியும், எமக்கு எது நல்லது, எது கெட்டது என்று என எண்ணி, எம்மை முழுமையாக, விசுவாசத்துடன் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு இருந்தால், எமக்கு நல்லது நடக்கவும், கூடாதது நடவாமல் போகவும் கூடிய முறையில் இறைவன் பார்த்துக் கொள்வான். நாம் இறைவனின் செயல்களில் குறுக்கிடுதலோ, தலையிடுதலோ ஆகாது. எல்லாம் நன்மைக்குத்தான் என்றிருக்க வேண்டும். இறைவன் நமக்கு நல்லவற்றைத்தான் செய்வான் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். எமக்கு நல்லவையாகத் தோன்றுவன உண்மையில் எமக்குத் தீமையாக விளையக் கூடும். அது எமது சிற்றறிவுக்கு விளங்காது. ஆனால் இறைவனுக்குத் தெரியும். அவ்வாறு நன்மையாகத் தோன்றி, தீங்கு விளைவிக்கக்கூடியனவற்றை எமக்கு அளிக்கமாட்டான். அதுவே இறைவனின் கருணை.

மகாபாரதப் போர் முடிவில், கண்ணன் தனக்குத் தேரோட்டியாக அமர்ந்தமை பற்றி அருச்சுனன் சற்று பெருமிதம் அடைந்தான். தேரைவிட்டு இறங்குவது, முதலில் தேரோட்டி, அதன் பின்னரே தலைவன் என்ற முறையில் கண்ணனை முதலில் இறங்கச் சொன்னான் அருச்சுனன். ஆனால் தேரோட்டி கண்ணனோ, அருச்சுனன்தான் முதலில் இறங்கவேண்டும் என்று வற்புறுத்தினான். கொஞ்ச நேரம் இருவரும் வாதாடினார்கள். கண்ணன் பரமாத்மா என்பதை மறந்து தேரோட்டிதானே என அருச்சுனன் நினைத்ததே அவனின் அகம்பாவத்திற்குக் காரணம். கடைசியில், அருச்சுனன் வேண்டா வெறுப்புடன் தேரை விட்டுக் கீழே இறங்கினான். அதன் பின் கண்ணன் இறங்கினார். கண்ணன் இறங்கியதுதான் தாமதம், உடனே தேர் தீப்பற்றிக் கொண்டது. பகைவர்கள் எய்த நெருப்பை உமிழுகின்ற அம்புகள், மற்றும் ஆயுதங்கள் தேரில் வந்து சொருகியிருந்தன. கண்ணன் தேரில் இருக்கும் வரை அவற்றால் எதுவும் செய்ய முடியவில்லை. கண்ணன் இறங்கியதும் அவை தேரை எரியச் செய்துவிட்டன. அருச்சுனன், மரியாதையைப் பார்த்து, இறங்காமல் இருந்திருந்தால், தீ அவனையும் பற்றியிருக்கும். இவ்வாறு இறைவனின் ஒவ்வொரு சொல்லும் செயலும் எம்முடைய நன்மைக்குத்தான் என எண்ணி நடந்து வந்தால் எமக்கு ஒரு பொல்லாப்புமில்லை என்பதை உணர்த்தவே கண்ணன் இவ்வாறு செய்தார். அதைவிட்டு, இறைவனின் நடைமுறைகளில் நாம் குறுக்கீடு செய்வதால் நன்மை ஏற்படாது. இறைவனின் ஒவ்வொரு செயலும் பொருள் பொதிந்தது. நாம் இறைவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்துவிட்டால், அவன் எமக்கு நன்மையைக் கிட்டச் செய்வான்; தீமையைக் கிடைக்காமல் செய்வான். இறைவன் செயல்கள் எல்லாம் நன்மைக்கே என்பதை உணர்ந்து கொள்வோமாக.

# பதினோராம் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளையார் பாடலொன்று பன்னிரு பெயர்ப்பதி மீது

**சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**

கழுமலம் என்பது சீர்காழிக்குரிய பன்னிரு திருப்பெயர்களில் ஒன்று. அப்பதியில் எழுந்தருளிய சிவபெருமான் மேல் பட்டினத்துப் பிள்ளையார் ஒரு பதிகம் பாடினார். அது மூன்று மணிகளால் யாக்கப்பெற்றது. மும் மணிகளால் மாலையாகக் கோவையானதனால் மும்மணிக் கோவை என்றாயிற்று. கழுமலப் பிரானுக்குச் சாத்தும் மும்மணிகளால் ஆன மாலையினால் கழு மலமும் மணிக்கோவை என்று பெயர் பெற்றது. மும்மணி – மூன்று மணிகள், மூன்று மணிகளானவன – அகவல்பா, வெண்பா, கலிப்பா என்னும் பாவினங்களைக் குறிக்கும்.

திருக்கழுமல மும்மணிக்கோவையில் கழுமலநகர்க் கண்ணுதல் ஊழிக்கால வெள்ளத்தில் உயர்ந்தமை, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருக்கு அருள்புரி திறம், பிரமபுரீசுவரருடைய இயல்புகள், பிறவியின் குறைபாட்டை முறையிடுதல், மறுமாற்ற வழி வேண்டுதல் செய்தல், வழிபாட்டுப் பண்பு ஆதியன ஓதப்படுகின்றன. பன்னிரு பாடல் பயில்வது.

திருக்கழுமல மும்மணிக்கோவைப் பிரபந்தம் சைவத் திருமுறை பதினொன்றில் இருபத்தேழாவதாக வரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

பட்டினத்துப் பிள்ளையார் கோவையைப் பின்வருமாறு பேசத் தொடங்குவார்.

“ஊழிக்காலத்து உயர்ந்த வெள்ளத்தில் மிதந்து மூவகை உலகங்களுக்கும் இடுக்கண் களைவதற்காகப் பார்ப்பதி அம்மையாரோடு பரமேசுவரன் இனிதின் வீற்றி ருந்தார். அந்நாளில் ஒருநாள் சிவபாத விருதயரோடு அந்தணச் சிறுவர் ஆலயத்தை அடைந்தார்.”

தந்தையார் தமது நியமங்களை நிறைவேற்றும் பொருட்டுத் தனயரைத் தனியாக விட்டு அப்பால் அகன்று சென்றார். தளர்நடைப் பருவத்து அந்தணச் சிறுவரை வளர்பசி வருத்தியது.

அன்னாயோ என்று அழுது அழைத்தார் ஞானக்குழந்தை, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைப் பரமரைப் பார்த்து, சிவபிரான் தாய்ப்பாலுடன் ஞானப் பால் குழைத்த போனகப் பொற்கிண்ணத்தை முன்வந்து குழந்தை கையில் ஈந்தார்.

குழந்தை பொற்கிண்ணத்தை வாங்கியது. ஞானப் பாலைப் பருகியது, பசி தீர்ந்தது, அழுகை அகன்றது. முகத்தில் அருள் தாண்டவமாடியது.

சிறிது பொழுதில் தமது கடமையை முடித்துத் தந்தையார் வந்தார். மைந்தரை உற்று நோக்கினார். பால் வடிவதை மைந்தன் முகத்தில் பார்த்தார். அவருக்குக் கோபம் மிகுந்தது :

“யார் தந்த பாலைப் பருகினாய்?” என்று சிவபாதவிருதயர் மைந்தரைச்

சற்று அதட்டிக் கேட்டார். உடனே மகனார் வானத்தைச் சுட்டிக் காட்டினார்:

தோஒடுடைய செவியன் என்றும் பீஇடுடைய பெம்மான் என்றும் எடுத்து அடையாளங்கள் சொல்லிப் பாடினார் திருஞானசம்பந்தர்.

அக்கணத்தில் அவ்விடத்தில் பெருமானே நீ வெளிப்பட்டாய்.

"தோடுடைய யசெவி யன்விடை
யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய யசுட லைப்பொடி
பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடை யமல ரான்முனை
நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடை யபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே.
திருமுறை -- 1-1-1

"தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் னின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென
அவனைக் காட்டுவான் அப்ப வானார்
தோஒ டுடைய செவியன் என்றும்
பீஇ டுடைய பெம்மான் என்றுங்
கையில் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே
திரு-க-மு - 1-24-33

அருட்கடல் அடியேனுடைய அன்பு என்னும் வழிப்பொருள் புகலித்தலைவர். இருள் புகுந்த கண்டத்தினன் என்பவர் களிடத்தில் அன்பு செய்து தேவர்கள் கைதொழுவார்கள். அதற்கு நாம் ஆர்?

புகலிநாதன் நால் வேதத்திற்கு அப்பாற் பட்டவன். அப்பெருமானை அறிவதோ அரிது என்று காண எழுந்த நாரணன் நான்முகற்கு நாடற்கரியவன். எங்கும் நிறைந்த பரிபூரணன். எங்கள் புகலிப் புண்ணியன் அனைத்து உலகத்தினுடைய தோற்றத்திற்கு மூலகாரணன். அந்தக் கரணங்களால் அறிவதற்கு அரியவன். தானே கருவாகி அனைத்தையும் உருச் செய்வான்.

கருவுற்ற நாள் முதலாகக் காமம் வெகுளி பொய் என்னும் தூய்மை இல்லாத குப்பைகள் தேங்கிக் கிடந்தன. அவ்வ வற்றை அரிதாக அகற்றினை. கருமைமிக்க ஐந்து வகைப் பொறிகளாகிய கடாக்களைக் கட்டு அவிழ்த்து நீக்கினை.

அன்பினால் மெழுக்கிட்டு அருள் தீபம் ஏற்றித் துன்பத்தைத் துரந்தேன். உண்மையை மேற்கட்டியாக்கினேன். கீழ்நோக்கிப் பயின்ற என்மனத்தை உனக்குப் பள்ளியறை ஆக்கினேன்.

இருதயமாகிய தாமரை மலரை நல்லாசனமாக்கினேன். எம்பிரான் அமர அமைத்தனன்.

கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனுங்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்
தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தனன் சிந்தைப்
பாழுறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்

**சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி செந்தைநீ இருக்க இட்டனன்.**

**4-1-13 வரி**

"புகலி நாயக! அருள்நனி சுரக்கும் பிரயளவிடங்க! உன்னுடைய செல்வச் சிலம்பின் இன்னிசை நாதம் செய்யும் காட்சியில் அமைந்த இமயமலை மகளையும் உடனாகக் கொண்டு எம்பெருமான் இங்கு எழுந்தருளுதல் கடனாகும்.

திருக்கரத்தில் மான்கன்றும் மழு வாயுதமும் திகழும், திருமிடற்றில் இருள் வாழும். சடையிற் பிறை வாழும். தேவர் களுக்குப் பெருவெள்ளத்தில் வெளிப் பட்டீர்கள். என் உள்ளத்தில் ஒளிரும் சிவஒளி கழுமலத்தில் வீற்றிருந்தீர்கள்.

நமது கழுமலப் பிரானுடைய இன்னருள் ஒளியாக வெளிப்பட்டது. மனத்திருள் மறைய என்னுடைய உள்ள அருள்வெள் ளத்தில் அகப்பட்டது. தெளிந்த தேனமுத முமாய் தித்திப்பானது. சிந்தைக்கு எட்டாத களிப்பில் ஆழ்த்தியது. அன்பு பரிணமித்தது.

அருள் பழுத்துக் கனிந்த மேலான கருணைக்கனி அது. வெறுக்காத இன்பம் நிறைந்த விருப்பு. அடியார்க்கு அமுதக் கடல். உயர்ந்த மாடக் கோபுரப் பொற்சிகரம் முகிலின் வயிற்றைக் கிழிக்கும்.

கழுமலக் கற்பகமே! நின்னுடைய காட்சி குற்றமில்லாதது. பாவையுடன் அமர்ந்த பரமயோகி! யான் ஒன்று உரைப்பேன்.

"எம்பெருமான் முன்னாளில் அனைத்து உலகங்களையும் அனந்த யோனிகளையும் தோற்ற நீ திருவுளங் கொண்டநாள் தொடங்கி, எல்லா வாயில்களும் யாவரும் யாவையும் எனக்குத் தனித்தனி தாயராகி யும் தந்தையராகியும் வராதவர் இல்லை. நான் பிறவாத பூமியும் இல்லை. என்னைத் தின்னாத உயிர்களும் இல்லை. யான் அவற்றைத் தின்னாததும் இல்லை.

காலம் கழிந்தது. யான் இனிமேல் இளைக்கவல்லன் அல்லேன். தூண்டு சுடரனைய சோதி! நின்னுடைய திருவைந் தெழுத்துப் பயின்றிலன். ஆகம சீலர்களை அணுகி அறியேன். ஆனாலும் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் தூற்றுவது மலர் வாய்ச்சொல் மந்திரமாக மதித்து என்னையும் துன்பப் பிறப்பு இறப்பு இரண்டில் அழுந்தாதவண்ணம் காப்பது கழுமலக் கடவுள் கடன்.

திருக்கழுமலத்தில் முக்கட் பெரு மானைக் கைஎடுத்துக் கூப்பாதவர் காமக் கடலில் ஆழ்வர். துன்பத்தைத் துடைக்கும் வழிகாணார். உடல் மலக்கூடு என்ற உண்மையை ஓரார்.

வணங்கும் இவள் வளையல் இழப்பாள். துன்பத்திற்கே பழிமொழி சுமப்பாள், எழுவாய். எழுகின்றது என்ன செய்வ தற்கோ? என்னுடைய மனத்திருக்கும் கழுவா மணியை – கழுமல வாணனைக் கரத்திற் கொண்ட மழுவாளனைக் கண்டு களிக்கப் பெற்றால் ஓர் இழிவு இல்லையே.

புகலி நாயக! இடப வாகன! வேயுறு தோளிபங்க! முப்புரம் முனிந்த முக்கட் செல்வ! இளநிலா முகிழ்க்கும் வளர்பிறைக் கடவுள்!! நெற்றியில் சிறந்த ஒற்றைக் கண்ண! காமனைக் காய்ந்த கடவுளே!

தேவரறியா ஆதியானே! கல்லாமனத்தில் கசட்டறிவு தோன்றக் காண்தொறும் காண்தொறும். என்னவாயினும் பிறருடையனவும் பிறப்பதும் அழிவதும் போக்கும் வரவும் நிகழ்வும் ஆகின்றது. நீர்சூழ் உலகத்தில் திரண்ட மணலினும் அனந்த கோடிப் பலவாகி இல்லாதன உளவாகியும் உள்ளன, இல்லாதனவாகியும் நெடுநாள் இருளில் கிடந்து இடறினேன். இத்தடுமாற்றம் எல்லாம் பார்வை இல்லாதவருக்கு வழிகுழியாகும், குழியாவது போல ஒன்று மாறி ஒன்று தடுமாற்றும்.

பெருமானுடைய திருவருள் பார்வையைக் கருணையினால் பெறுதலும் எல்லாம் பொய் என்று எனக்குத் தோற்றியது. நீ ஒன்றே மெய் என்று விளங்குகின்றது. அது ஓவியன் ஒருவன் வரைந்த சிற்ப விகற்பம், எல்லாம் தடவினருக்குச் சுவராகத் தோன்றுதல் போல,

**'.... எந்தைநின்**
**திருவருள் நாட்டம் கருணையின் பெறலும்**
**யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி**
**மேவரும் நீயே மெய்மையெனத் தோன்றினை**
**ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய**
**சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்**
**தவிராது தடவினர் தமக்குச்**
**சுவராய்த் தோன்றும் துணிவுபோன் றனவே-**

**10-27-34 வரி**

"மலர் கிடைக்கப் பெறாவிட்டால் பச்சிலை இருக்கிறது, நீர் இருக்கிறது. அவையும் கைவரப் பெறாவிட்டால் நெஞ்சு இருக்கிறது. சூதாடு கருவி தனத்தள் பாகர் திருத்தோணி புரேசருடைய வண்டின் தாதும் பெறாத திருவடித்தாமரை சென்று சேர்வதற்கே.

**போதும் பெறாவிடில் பச்சிலை**
**உண்டு புனலுண்டெங்கும்**
**ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்**
**றேயிணை யாகச் செப்பும்**
**சூதும் பெறாமுலை பங்கர்தென்**
**தோணி புரேசர்வண்டின்**
**தாதும் பெறாத அடித்தா**
**மரைசென்று சார்வதற்கே.**

## ராஜ கோபுர அடுக்குகள் குறிப்பன

*மூன்று அடுக்கு : ஜாக்ரம், சொப்னம், சுசுப்தி*

*ஐந்து அடுக்கு : ஐம்பொறிகளைக் குறிக்கும்*

*ஏழு அடுக்கு : ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்பவற்றைக் குறிக்கும்.*

*ஒன்பது அடுக்கு : ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவற்றைக் குறிக்கும்.*

# தவில் மேதை தட்சணாமூர்த்தி



இணுவிலில் பிறந்து அளவையூரிலே வாழ்ந்த ஈடு இணையற்ற தவில்மேதை "லயஞான குபேர பூபதி" தட்சணாமூர்த்தி அவர்கள் யாழ்ப்பாணத்து வாத்தியக் கலைஞர்களுள்ளே சிறப்பான இடத்தில் வைக்கப்பட வேண்டியவர்கள். இவர் இணுவிலில் வாழ்ந்த பிரபல இசை விற்பன்னரான விசுவலிங்கத்திற்கும் அவரது துணைவியார் இரத்தினம் அவர் கட்கும் புத்திரனாய் 26-08-1933ஆம் ஆண்டிலே பிறந்தார்.

மிகச் சிறிய வயதிலேயே பிரபலமான தவில் வித்துவான்களான என்.சின்னத்தம்பி, பி.எஸ்.இராஜகோபால், காமாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோரிடம் தவில் கற்று தன் எட்டாவது வயதிலேயே கச்சேரிகள் செய்ய ஆரம்பித்துவிட்டார். பிற்காலத்திலே இந்தியாவிலிருந்த பிரபல தவில் மேதையான நாச்சியார் கோயில் இராகவப்பிள்ளையிடம் ஒன்றரை வருடகாலம் பயிற்சி பெற்ற பின்னர், இவரின் குரு இனி உனக்குச் சொல்லித்தர என்னிடம் எதுவும் இல்லை என கூறி வாழ்த்தி வழி அனுப்பி வைத்தாராம்.

1959ம் ஆண்டு சென்னைத் தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பெற்ற இசை விழாவில் காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளையின் நாதஸ்வரத்திற்கு தவில்மேதை நீடாமங்கல சண்முகவடிவேலு அவர்களுடன் இணைந்து தட்சணாமூர்த்தி அவர்களும் தவில் வாசித்து பெருஞ்சிறப்பு பெற்றுள்ளார். இந் நிகழ்ச்சியை நேரடி ஒலிபரப்புச் செய்த அகில இந்திய வானொலி வழமை போன்ற பன்னிரண்டு மணியோடு நிறுத்திக் கொள்ளும் தம் நிகழ்ச்சிகளை அன்று நிறுத்தாது கச்சேரி முடியும்வரை தொடர்ந்தார்கள்.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலெல்லாம் தவிற்கச்சேரி செய்த தட்சணாமூர்த்தி அவர்களுக்கு கற்பனைச் சுரங்கம், கரவேக கேசரி, தவில் வாத்திய ஏகச் சக்கிராதிபதி, லயஞான குபேர பூபதி என்ற ஏராளமான பட்டங்கள் வந்து சேர்ந்தன.

அளவையூரைச் சேர்ந்த தவில் வித்து வான் செல்லத்துரை என்பாரின் மகளான மனோன்மணியைத் திருமணம் செய்து கொண்ட இவர், தனது நாற்பத்திரண்டாவது வயதில் 13-05-1975இல் இறையடி சேர்ந்தார்.

# வென்றவர் யார்?

**வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்கள்**

மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில் ஒரு செய்தி ஆழ்ந்து சிந்திப்பதற்குரியது. முத்திநாதன் மெய்ப்பொருளாரை வாளினால் குத்தினான் என்று சொல்லும் இடம் அது. கையிலே இருந்த வஞ்சகப் பையை மடியின் மேல்வைத்து சுவடியை அவிழ்ப்பவனைப்போலப் பாவனை செய்து மெய்ப்பொருள் நாயனார் தன்னை வணங்கும் போது அதனுள் மறைத்து வைத்திருந்த வாளை உருவித் தான் முன் நினைத்தபடி செய்ய, மெய்ப்பொருளார் மெய்யான தவவேடமே மெய்ப்பொருள் என்று தொழுது வென்றார் என்று சேக்கிழார் பாடுகின்றார்.

கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்து அவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கி தான் முன்
நினைந்த அப்படியே செய்ய
மெய்த்தவ வேடமே மெய்ப்
பொருள் எனத் தொழுது வென்றார்

*(புரிந்து – பாவனை செய்து பத்திரம் – வாள்)*

இந்த அருமைச் செய்யுள் இரண்டு நிகழ்ச்சிகளைச் சொல்கிறது. முதல் நிகழ்ச்சி முத்திநாதனுடையபாதகச் செயல். இரண்டாவது நிகழ்ச்சி மெய்ப்பொருள் நாயனாருடைய செயல். கையில் இருந்த கட்டை முத்திநாதன் மடியில் வைத்துக் கொண்டான். அதை அவிழ்ப்பவனைப் போலப் பாவனை புரிந்தான். இவர் ஆகமநூலை எடுத்து நமக்கு உபதேசம் செய்யப் போகிறார் என்ற எண்ணத்தால் அப்போது மெய்ப்பொருளார் வணங்கினார். அவர்தான் வாளை எடுப்பதை பார்க்கக் கூடாது என்ற எண்ணத்தால் முத்திநாதன் அவர் வணங்கிய சமயம் பார்த்து வாளை உருவிக் குத்திவிட்டான். அவன் இன்னது செய்தான் என்று சேக்கிழார் சொல்லவில்லை. "வாளை வாங்கித் தான் முன்னே நினைந்த அப்படியே செய்தான்" என்றே சொல்கிறார். முன்னே என்ன நினைத்தான்? அங்கும் வெளிப்படையாக அவன் கருத்தைச் சொல்லவில்லை.

"மெய்யெலாம் நீறுபூசி
வேணிகள் முடித்துக் கட்டி
கையினில் படைகரந்த
புத்தகக் கவளி ஏந்தி
**மனத்தினில் கறுப்பு வைத்துப்**
பொய் தவவேடங் கொண்டு
புகுந்தனன் முத்திநாதன்

என்பது அங்குள்ள பாட்டு. "மனத்தினுட் கறுப்பு வைத்து" என்றே கூறுகிறார். ஆயினும் வாளை மறைத்துக் கொண்டு வந்தான் என்றால் வேறு எதற்காக வருவான்? குறிப்பினால் அவனுடைய எண்ணம் புலப்படுகின்றது. இதை நம் வாயால் சொல்லுவது ஏன் என்ற எண்ணத்தால் சேக்கிழார் வெளிப்படையாகச் சொல்ல வில்லை. "தான் முன்னே நினைந்த அப்படியே செய்ய" என்று கூறியதோடு அமைந்தார். இப்படிச் சொல்வது சேக்கிழார் இயல்பு. ஏனாதிநாயனார் வரலாற்றில் அவரை அவர் பகைவன் கொன்றான் என்ற

செய்தியையும் இப்படியே குறிப்பாற் பெற வைக்கிறார்.

"முன்நின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்" என்பதே அவர்கூறும் செய்தி. அதன் கருத்துக்குறிப்பினால் உணர்வதற்குரியது.

இனி மெய்ப்பொருள் நாயனார் செயலை
மெய்த்தவ வேடமே மெய்ப்
பொருள் எனத் தொழுது வென்றார்

என்று உணர்த்துகிறார்.

முத்திநாதன் மெய்ப்பொருளாரை முடித்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடன் சிவனடியார் வேடம் பூண்டுவந்து தனிமையில் அவரைக் குத்தினான். அவன்தன் கருத்தின்படியே செய்தமையால் அவன் வெற்றிபெற்றான் என்று தானே சொல்ல வேண்டும்? ஒருவர் வென்றால் மற்றொருவர் தோல்வியுற வேண்டும் அல்லவா? இந்த வகையால் பார்த்தால் வென்றவன் முத்திநாதன். தோற்றவர் மெய்ப்பொருளார் என்றே சொல்லவேண்டும். ஆனால் சேக்கிழார் மெய்ப்பொருளாரையெ வென்றவராகச் சொல்கிறார். திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகக் கொண்டு விரிந்தது பெரியபுராணம். சுந்தரர் திருவாய் மலர்ந்தருளிய அப்பதிகத்தில் மெய்ப்பொருள் நாயனாரை,

**"வெல்லுமா மிகவல்ல,** மெய்ப்பொரு
ளுக்கடியேன்"

என்று அவர் கூறுகிறார். "வெல்லுமாற்றில் மிக்கவல்லமையுடைய மெய்ப்பொருள் நாயனாருக்கு அடியேன்" என்பது அதன் பொருள். சுந்தரமூர்த்தியார் கருதிய வெற்றியாது? முத்திநாதன் பலமுறை படையெடுத்துச் சென்று போரிட்டும் அவன் தோல்வியுற்றான். அப்போதெல்லாம் மெய்ப்பொருள் வேந்தரே வெற்றிபெற்றார். இந்த வெற்றிகளை எண்ணி "வெல்லுமா மிகவல்ல" என்ற அடையைச் சுந்தரர் அமைத்தார் என்று கூறலாம் அல்லவா? சேக்கிழார் அப்படிக் கருதவில்லை. மெய்ப்பொருளார் உயிர்கொடுத்த நிகழ்ச்சி அவருக்கு தோல்வியும், முத்திநாதனுக்கு வெற்றியும் அளித்ததாகத் தோற்றும். ஆனால் அப்போது தான் மெய்ப்பொருள் நாயனார் வென்றார் என்பது சேக்கிழார் கருத்து. இதைச் சிறிது கூர்ந்து ஆராய வேண்டும்.

வஞ்சகமாகக் கொலை செய்ய வந்த பகைவன்தன் கருத்தை முடித்தானேயன்றி வெற்றிபெறவில்லை. அங்கே போரே நிகழவில்லை. போர் நிகழ்ந்தால் அல்லவா வெற்றி உண்டாகும்? ஒருவன் கைவாள் எடுக்க, மற்றவர் கைகள் கும்பிட்டன. இதுவா போர்? ஆகவே முத்திநாதன் வென்றான் என்று சொல்வது முறையன்று.

முத்திநாதன் வெல்லவில்லை, போரும் இல்லை என்றால் முத்திநாதன் தோல்வியும் உறவில்லை. ஆகவே மெய்ப்பொருளார் வெற்றிபெற்றார் என்று சொல்லவும் வகையில்லை. இவ்வாறு சொல்லத் தோன்றுகிறதல்லவா?

புறப்போர் ஒன்று நிகழாவிட்டாலும் அகப்போர் ஒன்று இங்கே நிகழ்ந்தது. புறப்பகையை வெல்லும் வீரத்தைவிட அகப்பகையை வெல்லும் வீரமே பெரிய வீரம்.

"ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?"

என்று சேக்கிழாரே திருத்தொண்டர்களின் இயல்பைச் சொல்லும் போது புலப்படுத்துகிறார்.

"புலனைந்தும் வென்றான்றன் வீரமே வீரம்" என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு

எவ்வாறு மெய்ப்பொருளார் வெற்றி பெற்றார் என்பதைச் சேக்கிழாருடைய சொல்லமைப்பே காட்டுகிறது. தொழுது வென்றார் என்கிறார் வாள்எடுத்துப் பகைவன் குத்தும்போது எதிர்க்கும் உணர்ச்சிதான் யாருக்கும் வரும். வீர முடையார் பகைவனைத் தம் கைகொண்டு தாக்குவார் கோழையாக இருந்தால் கைகளால் தடுக்க முந்துவார். இங்கே மெய்ப்பொருளார் எதிர்த்துப் போரிடவும் இல்லை, கையால் தடுக்கவும் இல்லை. கைகளைக் குவித்துத்தொழுதார். அங்கே அவருடைய கொள்கைக்கும் உயிரை இழக்கும் அச்சத்துக்குமிடையே போர் நிகழ்ந்தது. அந்தப் போர் புறத்தே நிகழ விலலை. அகத்தே நிகழ்ந்தது. அவர் கொள்கை என்ன? சேக்கிழார் மெய்ப் பொருளார் இயல்பை

"அரசியல் நெறியின் வந்த
அறநெறி வழாமல் காத்து
வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி
உரை திறம்பாத நீதி
ஓங்குநீர் மையின் மிக்கார்
திரை செய்நிரச்சடையான் **அன்பர்**
**வேடமே சிந்தை செய்வார்"**

என்று புலப்படுகிறார். சிவனடியார் திருவேடத்தையே சிறந்ததாக மதித்து அதைத் தியானிக்கும் இயல்புடையவர் அவர். இந்த இயல்பை உணர்ந்தே வேடம் போடத் துணிந்தான்.

"மெய்ப்பொருள் வேந்தன் சீலம்
அறிந்து **வெண் ணீறு சாத்தும்**
**அப்பெரும் வேடம் கொண்டே**
அற்றத்தில் வெல்வானாகச்
செப்பரு நிலைமை எண்ணித்
திருக் கோவலூரிற் சேர்வான்"

என்பர் சேக்கிழார்.

ஆதலின் வெண்ணீறு பூசிய அடியார் வேடத்தைக் கண்ட மாத்திரத்தில் பணிந்து அன்பு செய்யும் மனப்பான்மை உடையவ ராக இருந்தார் மெய்ப்பொருளார். அவர் களுடைய இயல்புகள் எத்தகையன என்ற ஆராய்ச்சியில் அவர் புகுவதில்லை.

முத்திநாதன் குத்தியபோது அவன் இயல்பு மாறினாலும் வேடம் மாறவில்லை. மெய்ப்பொருளார் எதற்கு மதிப்பளித்தாரோ அந்த வேடம் குலையவில்லை. ஆயினும் அதைப் போற்றும் சமயத்தில் அவர் உயி ருக்குத் தீங்கு நேர்ந்தது. ஒரே உருவத்தில் வெண்ணீறும் இருந்தது. வாளும் இருந்தது. வெண்ணீறு மறைந்து வாள் மட்டும் இருந்திருந்தால் மெய்ப் பொருளார் எதிர்த்திருக்கலாம். ஆனால் வெண்ணீறும் இருந்தது; மெய்த்தவவேடம் இருந்தது. உயிரை மாய்க்கும் வாளும் இருந்தது, மெய்த்தவவேடத்தை மதிக்கும் கொள்கை யின்படி அவர் கைதொழ வேண்டும். உயிரைப் பாதுகாக்கும் அவா இருந்தால் எதிர்க்க வேண்டும். மெய்த்தவ வேடத்தின் பால் உள்ள பத்திக்கும் தம் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் அவா வுக்கும் போராட்டம் நேர்ந்தது. ஆனால் போராட்டம் நிகழ்வதற்கு முன்பே மெய்ப் பொருளார் மேற்கொண்ட கொள்கை வென்றது. அதுதானே அவருக்கு வெற்றி? அதனால்

மெய்த்தவவேடமே மெய்ப்
பொருள்எனத் தொழுது வென்றார்

என்றார் அவர் வென்றார். கையை எடுத்துத் தடுக்காமல் தொழுதமையே அவர் வெற்றிக்கு அடையாளம் அப்படித் தொழுதற்கு காரணம் மெய்த்தவவேடமே. மெய்ப்பொருள் என்ற கொள்கை

அவனிடம் உள்ள வேடம் மெய்யா, வாள் மெய்யா என்றால் மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று தோன்றியது அவருக்கு. ஆகவே சுந்தரர்

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொரு ளுக்கு அடியேன்" என்று கூறியதற்கு இதுதான் காரணமாக இருத்தல் வேண்டும். அதனை உணர்ந்த சேக்கிழார் காரணத்துடன் இப்பாட்டில் புலப் படுத்தினார்.

"கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைந்த அப்படியே செய்ய
மெய்த் தவவேடமே மெய்ப்
பொருளெனத் தொழுது வென்றார்.

நன்றி : "திருமுறை மலர்கள்"

## தாண்டக வேந்தன் புகழினை இசைப்பீர்

சைவரெனத் தினம் செப்பிடும் நல்லீர்
தாண்டக வேந்தன் புகழினை மொழிவீர்
மெய்த்தவம் இதுவெனக் கண்டு துதிப்பீர்
மேனியி னாலுயர் தொண்டுகள் புரிவீர்

கைத்தவ மாவது கடவுளைத் துதித்தல்
கலிகெட இறைபணி ஆற்றி மகிழ்தல்
இத்தரை மீதினில் இறைபுகழ் மகிமை
இயம்புதல் வாயின் பெரும்பய னாமே

உழவாரப் படைகொண் டாலயம் தோறும்
உள்வளர் களைகள் யாவுமே அகற்றி
பழமெனும் தமிழின் சாறுகள் கூட்டி
பைந்தமிழ் இசையால் இறைவனைத் துதித்தார்

முன்செய் வினையின் பயனித னாலே
முன்வரு இருமுது குரவரை இழந்தும்
நன்றே பேணும் திலக வதியார்
தன்துணை யாலே வாழ்வொளி கண்டார்

இன்னும் இனிய கல்வியை நாடி
இடும்பை தருமுயர் பாடலி புரத்தில்
நன்றுயர் சமணப் பள்ளியில் கற்றவர்
நாடியே சமணப் படுகுழி வீழ்ந்தார்

வீழும் சமணப் படுகுழி விட்டும்
விரைந் துடன் சைவ விளக்கினை நாடி
எழுந்திவர் வரவே செய்திறை வாவென
எழிலுறத் திலக வதியார் தொழுதார்

அழுதவள் கசிந்து கண்ணீர் மல்க
அரனும் அவ்வழி தன்விழி திருப்பி
பொழுதெல்லாம் சூலை நோயினில் வாட்டி
பூவை நல்லாள் இடம்சேர்த் திட்டார்

அன்றே சூலை அருநோய் விலக
அன்புடன் நற்றிரு நீறு வழங்கியும்
நன்றே நற்றிரு வதிகையை நாடியும்
ஞானத் தமிழால் இசைமழை பொழிந்தார்.

சு. குகதேவன்
*தெல்லிப்பழை.*

# சிவசின்னங்கள்

**மட்டுவில் ஆ. நடராசா அவர்கள்**

சமயங்கள் பல ஆனாலுஞ் சில சமயத்தவர் மாத்திரமே தத்தம் சமய சின்னங்களை அணிகின்றார்கள். கிறிஸ் தவர்களின் சின்னம் சிலுவை இஸ்லாமி யரின் உடை அவர்களை அடையாளங் காட்டுகின்றது. புத்த சமயத்தவர் எந்தச் சின்னத்தையும் அணிவதாகத் தெரிய வில்லை. சைவ சமயிகள் விபூதி உருத்தி ராக்கங்களைத் தமது சமய சின்னங்கள் என்கின்றனர்.

திருவதிகைப் பதிக்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் சென்ற காட்சியை

*"தூயவெண் ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ்வடமும்*
*நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையு நைந்துருகிப்*
*பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்*
*மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே"*

எனப் பெரிய புராணங் கூறுகின்றது.

தைவரும் சிந்தை – அன்போடு சிந்திக்கும் உள்ளம்.

இதில் தாழ்வடமென்றது உருத்திராக்க மாலையை இக் கூறறு, விபூதியும் உருத்தி ராக்கமுஞ் சிவசின்னங்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதனாலன்றோ நல்லை நகர் ஆறுமுக நாவலரும் தாமெழுதிய சைவ வினாவிடையில், "சைவர்களால் அவசியமாகச் சரீரத்திலே தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்கள் யாவை?" என்னும் வினாவுக்கு, "விபூதி உருத்திராக்கம் என்னும் இரண்டுமாம்' என விடை கூறியிருக்கிறார்.

திருநீறு சைவர்கள் தம்மை அடை யாளங் காட்டுவதற்காக மாத்திரம் அணியும் பொருளல்ல. அது சிவபெரு மானது அருளொளி விளக்கத்தைக் குறிக்குஞ் சின்னம். பாண்டியனுடைய வெப்புநோயைச் சமணரும் திருஞான சம்பந்தப்பிள்ளையாரும் தீர்க்கத் தொடங்கியபோது, சமணர் பாண்டியனது இடப்பாகத்திற் பொருந்திய நோயைத் தீர்க்கக் கருதி மயிற்பீலி கொண்டு தடவ அந்நோய் மேலும் மேலும் வளர்ந்தது. நோயின் வெம்மையைப் பொறுக்க லாற்றாத பாண்டிய மன்னன் சம்பந்தப் பிள்ளையாரை மனவருத்தத்துடன் நோக்கினான். சம்பந்தர்,

*"தென்னவ னோக்கங் கண்டு திருக்கழு மலத்தார் செல்வர்*
*அன்னவன் வலப்பால் வெப்பை யாலவா யண்ணல் நீறே*
*மன்னுமந் திரமு மாகி மருந்துமாய்த் தீர்ப்ப தென்று*
*பன்னிய மறைக ளேத்திப் பகர்திருப் பதிகம் பாடி"*

திருவளர் நீறுகொண்டு திருக்கையாற் றடவத் தென்னனது வெப்புநோய் தீர்ந்தது.

**கழுமலம் - சீர்காழி**

சம்பந்தர் வெப்புநோய் தீர்க்கப் பாடிய பதிகத்தினால், விபூதி மந்திரமாகவும் தந்திரமாகவும் மருந்தாகவும் பயன்

படுவதோடன்றி, போற்றி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பதென்பதை யும் துதிக்கப்படுவதென்பதையும் அறிய லாம். துதிக்கப்படுவது நீறென்பது,

*"மாலற நேய மலிந்தவர் வேடமும்*
*ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"*

என்னும் மெய்கண்டதேவ நாயனார் வாக்காலும் வலியுறுத்தப்படுகின்றது.

விபூதி சைவ சமயிகளுக்கோர் உண்மையை உணர்த்துகின்றது. விபூதி யாவது பசுவின் சாணத்தை அக்கினி யினாலே சுடுதலால் உண்டாகிய திருநீறு. பசு என்பது ஆன்மாவையும் சாணம் என்பது பசுவெனப்படும் ஆன்மாவைப் பற்றியிருக்கும் மலத்தையுங் குறிக்கும். எனவே விபூதி, பசுவின் சாணத்தை அக்கினியாற் சுட்டெரிக்க வெண்ணிறம் விளங்குவது போல ஆன்மாவைப் பற்றி யிருக்கும் மலத்தை ஞானாக்கினியாற் சுட்டெரிக்ககச் சிவ விளக்கம் உண்டாகும் என்பதைக் குறிக்கிறது.

ஞானம் சைவ நாற்பாதத்தின் நாலா வது படி. எனவே ஞானத்தைப் பெறும் பொருட்டு நாம் சரியையாதியான நாற் பாதநெறியில் நிற்க வேண்டுமென்பதை யும் விபூதி உணர்த்துகின்றதெனலாம்.

விபூதியின் சிறப்பைக் குறிப்பிடக் கருதியதனாற் போலும், சேக்கிழார் பெருமான் தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்தின் முதற் காண்டத்து முதற் பாடலின் முதல் வரியில் 'திருநீறு' என்னுஞ் சொல்லை உபயோகித்திருக்கிறார்.

*"பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்*
*பன்னு நீள்பனி மால்வரைப் பாலது*
*தன்னை யார்க்கு மறிவரி யானென்றும்*
*மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை"*

என்பது அப்பாடல்.

பன்னும் – பாராட்டிச் சொல்லப்படும்.
மன்னும் – நீங்காமற் பொருந்தியிருக்கும்.
மால்வரை – பெரியமலை.

விபூதியை வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு நிலத்திற் சிந்தாவண்ணம் அண்ணாந்து 'சிவ சிவ' என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் உத்தூளனமாக அல்லது திரிபுண்ரமாக நெற்றியிலே தரித்தல் வேண்டும். திரிபுண்டரம் – மூன்று குறி. உத்தூளனம் பரவிப் பூசுதல். இவ்விதிக்கு மாறாக ஒரு விரலால் விபூதி தரித்தல் குற்றமாகும். விபூதி, விபூதி தரித்தல் பற்றிய விபரங்களை ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய முதலாம் இரண்டாம் சைவ வினாவிடைகளிற் காண்க.

உருத்திராக்கம் என்பது தேவர்கள் முப்புரத்து அசுரர்களால் தமக்கு நேர்ந்த துன்பத்தைச் சிவபெருமானுக்குக் கூறிய போது அவருடைய மூன்று திருக்கண் களுஞ் சொரிந்த நீரிற்றோன்றிய மணி களாகும். மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவர்களாய் ஆசாரமுடையவரா யுள்ளவர்கள் உருத்திராக்கந் தரிக்கலாம்.

உருத்திராக்கந் தரிப்போர் குடுமி யிலும் பூணூலிலும் ஒவ்வொரு மணியும் தலையிலே இருபத்திரண்டு மணியும் காதில் ஒரு மணி அல்லது ஆறுமணியும் கழுத்தில் முப்பத்திரண்டு மணியும் புயத்திற் பதினாறு மணியும் கையிற்

பன்னிரண்டு மணியும் மார்பில் நூற்றெட்டு மணியுந் தரிக்கவேண்டுமெனவும், நித்திரை செய்யும் போதும் மலசலங் கழிக்கும் போதும் நோயுற்றிருக்கும் போதும் பிறப் பிறப்புக்களால் வரும் ஆசௌச காலங்களி லும் குடுமி காது, பூணூல் தவிர்ந்த மற்றைய தானங்களில் உருத்திராக்கந் தரிக்கக் கூடாதெனவுங் கூறப்படுகின்றது.

சிவபெருமானுடைய கண்ணீரிற் றோன்றிய உருத்திராக்கமணி அவ ருடைய கண்களிலிருந்து தோன்றுந் திருவருளைக் குறிக்கின்றது. எனவே திருநீறும் உருத்திராக்கமும் சிவபெரு மானுடைய அருளொளி விளக்கத்தைக் குறிக்குஞ் சின்னங்களாகக் கருதப்படு கின்றன.

இக்காலத்தில் உருத்திராக்கந் தரிப் போரைக் காணுதல் அரிதினும் அரிதாகி விட்டது. விபூதி தரிப்போரிற் பலர் ஒரு விரலால் விபூதி தரித்தலாகாது என்ற நாவலரின் அறிவுரையைப் புறக்கணிப் பவர்களாகவே காணப்படுகிறார்கள். அத னால், பாடசாலைகளில் சைவ சமயத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அறநெறிப் பாட சாலை ஆசிரியர்கள், சைவ சமய விழாக் களை எடுப்போர். ஆலய பரிபாலனஞ் செய்வோர் போதனையோ டமையாது, சைவ சமயிகளை அவர்களது சமய சின்னங்களை விதிப்படி அணியச் செய்வதற்காவது நடவடிக்கையெடுக்க வேண்டும்.

# இதய அஞ்சலி

## அமரர் வைத்திலிங்கம் சீவரத்தினம் அவர்கள்

எங்கள் தேவஸ்தானத்தில் காவல் கடமையை பக்திபூர்வமாக ஆற்றி பலரது நன் மதிப்பையும் பெற்ற அம்பாள் சேவையாளரின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறோம்.

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# வைகாசி விசாகம்

சைவமக்கள் தொன்றுதொட்டு, வாழு கின்ற இயற்கைச் சூழலோடு இணங்கியும் இசைந்தும் வாழ்ந்து வருபவர்கள். அவர்களின் வாழ்வியல் தேவைகளை முட்டின்றிப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அத்தகைய வாழ்க்கைமுறை பெரிதும் உதவி வருகின்றது. இந்த வாழ்க்கை முறை, சூழலுக்கு இயைபாகவும், சூழலில் ஏற்படுகின்ற பருவ மாற்றங்கள், கால மாற்றங்கள் மற்றும் இயற்கை மாற்றங்கள் ஆகியவற்றிற்கேற்ப இசைந்து கொடுக்கும் தன்மையையும் கொண்டு விளங்கி வருகின்றது. மக்கள் இந்த வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதற்கும், அதன்படி நல்வாழ்க்கை வாழ்வதற்கும், அவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து, பின்னர் தெய்வீக நிலையை அடைவதற்கும், சைவசமயம் வழிகாட்டுகின்து. அதனால் சைவசமயம், சமயம் ஆக மாத்திரம் நின்றுவிடாது அல்லது வெறும் தத்துவ மாகவோ, கோட்பாடாகவோ அமைந்து விடாது; சைவ நெறியாகவும் விளங்கு கின்றது. சைவ நெறி, மக்கள் வாழ்க்கை யோடு தொடர்புபடுவதாலும், மக்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாக விளங்குவ தாலும் சைவநெறி, வாழும் நெறியாக என்றும் காணப்படுகிறது.

சமய தத்துவங்களுக்குப் பயன் அறிவு அல்லது ஞானம். அறிவு, அறிவு நிலை யுடன்தான் பணியை முடித்துக் கொண்டால், அவ் அறிவு பயனற்றதாகிவிடுகிறது. பெற்ற அறிவு பயன்தருவதாக இருக்கவேண்டு மெனில், அந்த அறிவு செயலாக வேண்டும். அறிவு செயலாதல் என்பது, அந்த அறிவை, மனித வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். எனவே, அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்று பெரியோர் கூறுகின்றனர்.

அறிவும் ஒழுக்கமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. இரண்டும் இருக்கும்போதுதான், மதிப்பு பேணப்படு கிறது. ஒன்று இல்லாவிடினும் மதிப்புப் போய்விடுகிறது. எனவே சமய தத்துவமும், சமய ஒழுக்கமும் இணையவேண்டியது அவசியம். அவ்வாறு இணைவது எப்போ தெனில், சமயம், மக்கள் வாழ்க்கையோடு தொடர்புற்று விளங்கும் நிலையிலேயே யாகும். சைவ சமயம் மிகத் தொன்மை வாய்ந்த சமயம். அது இன்னும் வாழுகின்றது என்றால் அதற்குரிய காரணம், சைவ சமயம் அறிவையும் ஒழுக்கத்தையும் வற்புறுத்து வதேயாகும்.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

என்கிறது தமிழ் வேதம். எனவே, மனித வாழ்க்கையொடு தொடர்புபட்டு; அறிவு வேறு, ஒழுக்கம் வேறு என்று கொள்ளாது; இரண்டையும் இணைத்துக் கொண்டு, சைவம் ஒரு வாழ்க்கை நெறியாக விளங்குவதாலேயே, அது வாழும் நெறியாக மேன்மை பெற்று மிளிர்கின்றது.

சமய தத்துவம், சமய அறிவு, சமயக் கோட்பாடுகள் என்பன செயற்பாடுகள் ஆகவேண்டும் எனக் கூறினோம். அதற்கு முதற்படி அவற்றைக் கற்றல், அடுத்தபடி கற்றாங்கு ஒழுகுதல். இவ்விரண்டு செயற்

பாடுகளும் மனிதர்கள் சம்பந்தப்பட்டவை. இன்பமானவற்றை, இனியவற்றை, சுவை யானவற்றை, விரும்புதல், தேடுதல், அடைதல் என்பன மனித இயல்பு. எனவே, மனிதர்கள் கற்கவேண்டிய அறிவுகளை, இன்பந் தருவனவாக ஆக்கிச் சுவைபட வழங்கி னாலேயே அவற்றைக் கற்பார்கள். இவ்வாறு மனித இயல்போடு ஒட்டியதாக சுவைபட வழங்குவதற்கும்; அவற்றில் ஆர்வமும், உற்சாகமும் ஏற்படச் செய்வதற்கும் உரிய வழிமுறைகள், உத்திகள், நுட்பங்கள் எவை என்பது பற்றி நம் முன்னோர்கள் சிந்தித்தனர். அறிவியற் கலைகளை, அழகியல் கலைளாக்கினால் அங்கு சுவையும், இன்பமும் மிளிரும் என்பதை உணர்ந்தனர். எனவே, பண்டிகைகள், விழாக்கள், உற்சவங்கள், திருஉலாக்கள், சடங்குகள் என மாதங்கள் தோறும், ஆண்டு முழுவதும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்தனர். அவை யாவும் தெய்வங்களை முதலாகக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. மனிதர்கள் தாம் எவ்வெவற்றில் விருப்பங் கொள்கின்றார்களோ, எத்தகைய கொண்டாட்டங்களில் இன்பமும் திருப்தியும் எய்துகின்றார்களோ; அவற்றிலெல்லாம் தெய்வங்களும் விருப்பங் கொள்கின்றன. அவை மனிதர்களால் நிறைவேற்றப்படும்போது, தெய்வங்கள் மிக்க மகிழ்ந்து, மனிதர்கள் வேண்டுவன வற்றையெல்லாம் வழங்குகின்றன என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுகின்றது. இந்த நம்பிக்கைதான் மருத்துவ வசதிகள் இல்லாத காலங்களிலும்; இயற்கை இடையூறுகள், அனர்த்தங்கள் மனித ஆற்றலினால் கட்டுப்படுத்த முடியாமலிருந்த காலங்களிலும், மனித குலம் அழிந்து போகாமல், காப்பாற்றி வந்தது. இன்றும் நம்பிக்கையுள்ளவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். இந்த வகையில், சைவ மக்களிடையே, சைவ சமயம், சைவநெறியாக, அன்பு நெறி யாக, பக்தி நெறியாக மலர்ந்துள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது. மனிதர்களை வாழ வைக்கின்ற தெய்வ நம்பிக்கைக்கு அடிப்படையாக உள்ளவை. தெய்வத்தின் மேல் அவர்கள் கொண்டுள்ள அன்பும், பக்தியுமே.

வைகாசி மாதம், வசந்த காலத்தில் வருகின்றது. கடுங்குளிரோ, கூடிய வெப்பமோ இல்லாத மக்கள் விரும்பும் அளவான வெப்பதட்ப நிலையைக் கொண்டிருப்பது வசந்த காலம். வசந்தத்தில் தென்றல் வீசும் என்பர். நமக்குச் சோளகக் காற்றாகலாம். மரங்கள், செடிகளில் வைகாசி மாதத்தில், காய்கள், கனிகள் நிறைந்திருக்கும். எனவே, மக்கள் வாழ்க்கைக்கு இதமான காலம். சமய விழாக்கள், கோயில் உற்சவங்கள், மற்றும் சமூக விழாக்கள் என்பன நடைபெறுவதற்கு ஏற்ற மாதம், வைகாசி. மக்கள் வாழ்க்கை மிகச் சுறுசுறுப்பாகவும்; சமய, சமூக வைபவங்களுடன் தொடர்புபட்டும் இக்காலத்தில் இருப்பது ஒரு விசேட அம்சமாகும்.

வைகாசி மாதத்து விசாக நட்சத்திரத்தில் முருகப் பெருமான், இவ்வுலகிலுள்ளோர் யாவரினதும் உய்விற்காக உதித்தனன் என்பது புராணம் கூறும் செய்தி.

**அருவமும் உருவமாகி அநாதியாய்ப்**
**பலவா யொன்றாய்ப்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்களாறும்**
**கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங்**
**குதித்தனன் உலகமுய்ய.**

இவ்வாறு முருகனின் தோற்றம் பற்றிக் கந்தபுராணம் கூறுகின்றது. சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்களின் கொடுங் கோன்மையாலும், நிட்டூரங்களினாலும் எண்ணில்லாத காலம் துன்பங்களுக்

குள்ளாகி, அல்லற்பட்ட தேவர்கள் அவற்றைப் பொறுக்கமுடியாத நிலையில் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானிடம் சென்று, தம்மை அசுரர்கள் இழைக்கும் துன்பங்களி லிருந்து விடுவித்தருளுமாறு வேண்டி நின்றனர். சிவபெருமானும் தேவர்களின் விண்ணப்பத்தை ஏற்று, தனது நெற்றிக் கண்ணிலிருந்து, ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்தினார். அந்த ஆறு பொறிகளும், விரைந்து சென்று சரவணப் பொய்கையுள் வீழ்ந்து, குளிர்ந்து, ஆறு அழகிய திருக் குழந்தைகளாகத் தோன்றின. அழகு என்ப தற்கு மறுபெயர் முருகு. அழகு உள்ளவன் அழகன். அவ்வாறு முருகு உள்ளவன் முருகன். அழகன் முருகன் தோன்றிய திருநாள் வைகாசி விசாகம். அதனால், முருகனை விசாகன் என்றும் விசாகப் பெருமான் என்றும் அழைக்கின்றனர்.

வைகாசி விசாகத் தினத்தை, முரு கனின் பிறந்த தினமாக, முருகனின் அடியார்கள் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்வது வழக்கமாகிவிட்டது.

பிறப்பும் இறப்பும் அற்ற இறைவனுக்கு, வருடத்தில் ஒருநாளைப் பிறந்த தினமாகக் கொண்டு, அந்நாளில் அவனை நீராட்டி, அழகுமிளிர அலங்காரங்கள் செய்து; ஆரா தித்து; பட்சணங்கள், பழங்கள் படைத்து நிவேதித்து; தீப ஆராதனைகள் செய்து, மங்கள வாத்தியங்கள் ஒலிக்க; பூம்பல் லக்கில் அமர்த்தி; பக்தர்கள் புடைசூழ, திருஉலா நடத்தி, அவனின் அளப்பிலா அழகு கண்டு, உலப்பிலா ஆனந்தத்தில் அடியார்கள் திளைத்து நிற்கின்றனர். உலகியல் நிலையில், பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் பிறந்த நாட்களை, சுற்றம், உறவினர், நண்பர்கள் ஆகியோருடன் வெகு விமரிசையாகக் கொண்டாடி மகிழ் கின்றனர். இதற்குக் காரணம் தம் குழந்தைகள், பிள்ளைகள் மீது பெற்றோரும் சுற்றத்தி னதும் கொண்டுள்ள பாசமும் பற்றும்தான். இங்கு தாம் வேறு, பிள்ளைகள் வேறு என்று எண்ணாத நிலையிலைக் காண்கின்றோம். அவர்களிடையே உள்ள நெருங்கிய உறவு முறைதான், ஒருமையுணர்வினை ஏற்படுத்தி யுள்ளது. அவ்வாறே, அடியவர்களும், இறை வனை வேறாக அந்நியப்படுத்திப் பார்ப்பது கிடையாது. தமக்கும் இறைவனுக்குமிடை யில் நெருக்கமான உறவுண்டு; வேறுபாடு இல்லை என்று கருதும்போது, அடியவர்கள் தாமும் இறைவனும் பிரிக்கமுடியாதபடி ஒன்றித்து விட்டவர்கள் என்ற ஒருமையுணர் வினை உடையவர்களாகத் திகழ்கின்றனர். எனவே, தம்முடைய மகிழ்ச்சிக்கும் திருப்திக்குமாகவே, பக்தர்கள் வைகாசி விசாகத்தினத்தன்று முருகனின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றனர். பக்தர் களின் அன்பு வலைக்குள் சிக்குண்டுவிட்ட முருகப் பெருமானும், அவர்களின் நன்மை யின் பொருட்டு, அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு அருள்புரிகின்றான். இலங்கையில் உள்ள முருகன் ஆலயங்கள் அனைத்திலும் வைகாசி விசாகத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நல்லூர், செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம், கதிர்காமம், மண்டூர், சித்தாண்டி, கொழும்பு ஜிந்துப்பிட்டி, கொம்பனித்தெரு ஆகிய இடங்களில் உள்ள முருகன் ஆலயங்கள் இந்த வகையில் குறிப்பிடத்தக்கவை.

முருகன் தோன்றும்போது அழகும் உடன் தோன்றியது. நாம் அழகாக இருக்கிறது என்று கூறும்போது; என்ன அளவுகோலைக் கொண்டு அழகினைத் தீர்மானிக்கிறோம். எது எது, என்ன ஒழுங்குமுறையில், எப்படி எப்படி எங்கெங்கே இருக்கவேண்டுமென்று கருதுகிறோமோ, அந்தவகையில் அவை

யெல்லாம் சீராகக் காணப்பட்டால், அங்கு அழகினைக் காண்கின்றோம். எனவே அழகு என்றால் ஒழுங்கு, செம்மை, சீர்மை, நீதி, நன்மை என்ற கருத்தைத் தருகின்றது. எனவே, முருகனை வணங்குபவர்கள் அழகினை ஆராதிக்கின்றார்கள். அழகினை ஆராதிப்ப வர்கள் ஒழுங்கினைப் பேணுபவர்கள்; செம்மையையும் சீர்மையையும் நேசிப்ப வர்கள்; நீதியை உபாசிப்பவர்கள்; நன்மை யைப் புரிபவர்கள். அமைதியை அனுசரிப்ப வர்கள் ஆக விளங்குகின்றனர். முருகனை வணங்குபவர்கள், வாழ்வில், நன்மையே சிந்தித்து, நன்மையே பேசி, நன்மையையே புரிந்து, நீதியின் அடிப்படையில் வாழ வேண்டும். அவ்வாறு வாழாதவர்கள் முருகனை நிந்தனை செய்த குற்றத்திற்கு ஆளாவர்.

முருகனின் தோற்றத்தின் நோக்கமே, தீமைகளை அழித்தலும், நன்மைகளைக் காத்துப் பேணலும். ஆணவம், கர்வம், செருக்கு, மமதை, பொறாமை, செய்ந்நன்றி மறத்தல், அகங்காரம், மமகாரம் போன்ற தீயனவற்றின் திரட்சியாகச் சூரன் முதலிய அசுரர்கள் இருந்தனர். முருகன் சூரசம்ஹாரம் செய்தான் என்றால் தீமைகளை அழித்தான் என்பது பொருள். முருகனைப் புறத்தில் வணங்கிக் கொண்டு சூரனை உள்ளத்தி லிருத்திப் பூசிப்பது மாபாதகச் செயலாகும். எனவே, வைகாசி விசாகத் தினத்தன்று, முருகனின் பிறந்த தினத்தை அனுசரிப்ப வர்கள் யாவரும், முருகனின் தோற்றத்தின் நோக்கத்தையும், காரணத்தையும் பற்றிச் சிந்திப்பார்களேயானால், மக்களின் அமைதி வாழ்விற்கு அநுசரணை செய்தவர்கள் ஆவர். எங்கள் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என்பதை மறந்துவிடலாகாது. அவ்வாறு மறந்துவிடாது, மீண்டும் கந்த புராணக் கலாசாரம் மலரும் நாள் எந்நாளோ, அந்நந்நாளே, நம்மைப் பிடித்த தொல்லை களும், துன்பங்களும் துயர்களும் நீங்கும் பெருநாளாகும்.

வைகாசிப் பூரணையுடன் இணைந்தே பெரும்பாலும், வைகாசி விசாகத் திருநாள் வருகிறது. பூரணை, முழுமதி நாள். பகலிலே, சூரியன் ஒளி கொடுக்க, அதனைத் தொடர்ந்து பூரணச் சந்திரன் ஒளி வீசி இருளகற்ற, முழுநாளுமே இரவில்லாத பகலாக விளங்கும் நாள். பூரணை முழுமதிநாள். இத்தகைய நந்நாளை மக்கள் தூக்கத்திலும் சோம்ப லிலும் வெறிதே கழிக்கக்கூடாதென்று எண்ணியவர்கள் நம் முன்னோர்கள். அதனால், கடவுள் வழிபாடு கடவுட் சிந்தனை, நல்ல கருமங்களில் ஈடுபடுதல் ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். அம்பாள் ஆலயங்களில் பொங்கல், மடை என்பன இப்புண்ணிய தினத்தில் நடத்தப்படுகின்றன. வற்றாப்பழை கண்ணகி அம்பாள் பொங்கல் பெருவிழா சிறப்பு வாய்ந்தது. வைகாசிப் பூரணையை இறுதிநாளாகக் கொண்டு விநாயகர், முருகன், அம்பாள் கோயில்களில் மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. வரு டாந்த குளிர்த்தி சடங்கு என்பன மட்டக் களப்புப் பிரதேசத்தில், கண்ணகி மற்றும் அம்பாள் ஆலயங்களில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாறு, வைகாசி விசாகத் திருநாள் சைவ மக்க ளுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த புனித நாளாக விளங்குகின்றது. இப்புண்ணிய தினத்தில் தெய்வ வழிபாட்டிலும், நற்கரு மங்களைப் புரிவதிலும், தான தருமங்களைச் செய்வதிலும் எம்மை ஈடுபடுத்தி நல்வாழ்வு வாழ்வோமாக.

*நன்றி :*

**விரதங்களும் விழாக்களும்**

# தில்லைக்கூத்தன் திருக்கூத்தில் திளைத்த திருமதி சிவநாயகி தியாகராசா அம்மையார்

**சிவத்தமிழ்ச்செல்வி**
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

அன்று எனக்கு வயது பத்தொன்பது. ஆசிரியர் பயிற்சி முடித்து உத்தியோகத்துக் காகக் காத்திருந்த நேரம். இக்காலத்தில் அடிக்கடி சிவநிலையம் தெல்லிப்பழைக்குச் சென்று வருவது வழக்கம். காங்கேசன்துறை பிரதான வீதியில் தெல்லிப்பழை கிழக்கில் அமைந்த இல்லம் இதுவாகும். கொழும்புத் துறை மகாமுனிவர் வருகை தருவார். ஒரு நாள் சுவாமிகளைக் கும்பிடுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அந்த நேரத்தில் கண்ணொளி காட்டிக் கருணை செய்தார். இன்னும் பல தவயோகி களும், அறிஞர்களும் இவ்வில்லத்துக்கு வருகை தரும்போது நானும் அங்கே அழைக்கப்படுவேன். இவர்களின் நயன தீட்சையினால் பெரும் பேறு பெற்றவள் நான் என்பதை மகிழ்ச்சியோடு தெரி விக்கிறேன். தேவார திருவாசகங்களை நல்லபடி ஓத இராமநாதன் பயிற்சிக் கல்லூரி எனக்கு வழி காட்டியமை நன்றியோடு நினைக்கத்தக்கது. இவ்வில்லத்துக்கு எப் பொழுது சென்றாலும் திருமுறைகளைப் படிக்கும் படியும் நற்சிந்தனைகளைப் படிக்கும் படிக்கும் அம்மையார் எனக்குக் கட்டளையிடுவார். இவருக்கு மூத்த சகோதரி கனகநாயகி என்ற நாமத்தைக் கொண்டவர். சட்டத்தரணியும் சிறந்த அறிஞருமாகிய தம்பையா அவர்களின் புத்திரிகள் இவர்கள். தெல்லிப்பழைக் கிராமத்துக்குப் பெருமைதேடித் தந்த இல்லங்கள் இவர்களுடையது. நூலாக்கப் பணியிலும், உரைவிரிக்கும் பணியிலும் சொற்பொழிவுப் பணியிலும், கட்டுரை எழுதும் பணியிலும் அக்காலத்தில் சிறந்தவர்கள் இவர்களாவர்.

சிவநாயகி அம்மையாரின் கணவர் தியாகராசா என்பவர். இவர்களுடைய ஒரே ஒரு மகள் சகிதேவி என்பவர். திரு.தியாகராஜா அவர்கள் பாடசாலை களின் பரிசோதகராக நீண்டகாலம் பணிபுரிந்தவர். ஒருநாள் என்னை அழைத்து பரீட்சை மேற்பார்வையாள ரான தன்னோடு உதவி மேற்பார்வை யாளராகக் கடமைபுரிய வரும்படி கட்டளை பிறப்பித்தார். நாளொன்றுக்கு ஏழு ரூபா ஐம்பது சதம் படியாக வழங்கப்படும் என்பதையும் தெரிவித்தார். 1944ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு உதவி மேற்பார்வையாளராகக் கடமைபுரிய நானும் சென்றேன். பெரியார் தியாக ராஜா அவர்கள் என்னையும் அழைத்துச் சென்றார். பரீட்சை மண்டபம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரியில் அமைந்திருந்தது. சிவநாயகி அம்மையார் அவர்கள் எனக்குரிய மதிய உணவையும் தயார் பண்ணித் தருவார். உத்தியோகத்துக் காகக் காத்திருந்த அந்த நேரத்தில் இப்படியான பணிக்குப் பல தடவைகள் நான் அழைக்கப்பட்டேன்.

மேலும் 1946ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மட்டக்களப்பு சென் ஜோசப் கன்னியர் மடத்தில் ஆசிரியப் பணிக்கு

அழைக்கப்பட்டேன். அம்மடத்தின் ஒரு பகுதியாக அமைந்ததே சென் சிசீலியா ஆங்கிலப் பாடசாலை ஆகும். அங்கு மூன்று ஆண்டுகள் விடுதியிலிருந்து கல்வி கற்பித்தபொழுது விடுமுறைக்கு வீட்டுக்கு வருவேன். அன்னை திருமதி சிவநாயகி தியாகராஜா அவர்களிடமும் அவரின் சகோதரியிடமும் அடிக்கடி சென்று கட்டுரை எழுதும் பயிற்சி, பாடங்கள் எழுதும் பயிற்சி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வேன். நான் அங்கு செல்கின்ற நேரம் எல்லாம் காலைவேளை தமது பூசையறையில் நடராஜப் பெருமானின் பூசை வழிபாட்டை முடித்துக்கொண்டு வெளியே வருவார். "நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க" என்று தொடங்கும் சிவபுராணம் அம்மையார் வாயில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். என்னைக் கண்ட வுடன் அமரவைத்து ஒரு திருவாசகம் பாடும்படி உத்தரவிடுவார். விடுமுறை காலம் இப்படியே நல்லபடி கழிந்தது.

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க**
**நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே – நல்லார்**
**குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோடு**
**இணங்கி யிருப்பதுவும் நன்று"**

என்ற பாடலுக்கேற்ப எனது வாழ்வு இத்தகைய பெருமக்களால் புடமிடப் பட்டது.

அம்மையாரின் இளமைப் பருவம் மிகமிகப் பக்திச் சிறப்போடும், கல்விச் சிறப்போடும் கழிந்தது. 1904ம் ஆண்டு ஆவணித் திங்கள் 03ஆம் திகதி தந்தையார் தம்மையாபிள்ளைக்கும் தாயார் பவளநாயகிக்கும் புத்திரியாக அவதரித்த இவர் தமது தந்தையாரிடமே அரிச்சுவடியையும், ஆரம்பக் கல்வியை யும் கற்றுத் தெளிந்தார். பின்பு இராம நாதன் பெண்கள் கல்லூரியில் கல்வி பயில்கின்ற வாய்ப்பைப் பெற்றார். தகுதி வாய்ந்த சைவத்தமிழ் ஆசிரியர்களும், ஆங்கில மேதைகளும் அம்மையாரின் கல்விக்கு உறுதுணையாக இருந்தனர். இந்த வகையில் கல்வி கற்று சைவத்தமிழ் மங்கையர் நிலையில் உயர்த்தப்பட்டார். இளமை தொட்டு இவருடைய அறிவும், ஆசாரமும் தந்தையார் தம்பையாபிள்ளையைப் பின்பற்றியதாகவே அமைந்தன. தந்தையார் நடராஜா வழிபாடு செய்பவர். அதனையே அம்மையார் அவர்களும் பின்பற்றினார். இவருடைய அயராத அன்பு தில்லைக் கூத்தனது புகழையே செறிந்திருந்தது. தமது அயரா அன்பைப் பின்வரும் பாடல்களால் விளக்குகிறார்.

**பிறந்து வளர்ந்து வரிதான நாட்டொடக்கம்**
**மறந்தொழியா தியன்றவரை ஒரே முதல்நீ**
**– யென்றுணர்ந்தும்**
**அறவா நின் பாதமலர் அமுதுண்டு சுவைத்திலனே.**

**கன்னியாய் யான் வாழ்ந்த போது மணி வாசகனார்**
**நின்னியலில் உருகியுனை யர்ச்சித்த நறும்பாடற்**
**சொன்மாலை சாத்தியே உணவருந்தல் அறியாயோ**
**இன்றென்னைக் கைவிடுதல் நின்கருணைக் கழகாமோ".**

அம்மையாரின் இல்லற வாழ்வுக்கு கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் ஆதரவு பூரணமாகக் கிடைத்தது. இவருக்கு வாய்த்த கணவனார் திருவாளர் தியாக ராஜா அவர்கள். சைவப் பற்றும், தமிழ்ப் பற்றும், ஆங்கிலப் புலமையும் உடையவர். கடமை உணர்வும் கண்ணியமும் மிக்கவர். தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்துக்கு முதலாவது நிர்வாகசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர். புனருத்தாரண

மகா கும்பாபிஷேகம் 1965ஆம் ஆண்டு நடைபெற்றபோது தலைமை தாங்கி அந்தணர்களுக்கும், அறவோர்களுக்கும், பக்தர் கூட்டத்துக்கும் வழிகாட்டியாக விளங்கியவர். இப் பெரியாரின் மனையறத்தில் கிடைத்த சிறப்பு சகிதேவி என்ற நாமத்தைக் கொண்ட அருமை மகள் அவதரித்தமையே ஆகும். அன்னார் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் மிகுந்த புலமை பெற்று இராமநாதன் கல்லூரியிலேயே மாணவியாகவும், ஆசிரியையாகவும் விளங்கினார். அம்மையார் சிவநாயகி அவர்கள் யோகர் சுவாமிகளின் நற்போதனைகளைப் பின்பற்றி யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்துக்கு அடிக்கடி சென்று வருவார். இதனாலே இவருடைய வாழ்வு மேலும் தெய்வீகத்தோடு இணைந்தது.

சமய நூல்கள் பலவற்றை வெளியிட்ட பெருமை இவருக்குண்டு. தந்தையார் எழுதுவித்த புலியூர்ப் புராணம் என்ற நூலை பன்னாலை சிவானந்த ஐயரின் ஆக்கமாக வெளியிட்டமை இவர் குடும்பத்துக்குப் பெருமை சேர்ப்பதாகும். தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் இந் நூலுக்குப் பெரிதும் வரவேற்பு ஏற்பட்டது. தெல்லிப்பழையைச் சேர்ந்த பன்னாலை என்னும் கிராமத்தில் அவதரித்தவர் வித்துவான் சிவானந்த ஐயர். குமாரசாமிப் புலவரிடம் பாடம் கேட்ட சிறப்பும் இவருக்குண்டு. இவர் தவத்திரு குன்றக்குடியடிகள் போன்றோரது தொடர்பும் அங்கு அம்மையாருக்கு ஏற்பட்டது. தமது நீண்ட நாட் தொடர்பை சைவசித்தாந்த மகாசமாஜத்தோடு மீண்டும் புதுப்பித்தார். தில்லைக்கூத்தன் பக்திப் பாமாலை என்ற நூலை மறுபிரசுரம் செய்து வைத்தார்கள். சென்னை மாவட்ட திருக்குறட் பேரவை தவத்திரு குன்றக்குடி அடிகளது தலைமையில் இவ்வெளியீட்டு விழாவை நடாத்தியது. இதன் மூலம் ஈழத்துப் பெண் பாலர்களுக்கு ஒரு பெருமையை ஏற்படுத்தி வைத்தார் திருமதி சிவநாயகி அம்மையார் அவர்கள். அங்கிருந்து 'பக்திமை மாமணி' என்ற பட்டத்தையும் அம்மையார் பெற்றுக்கொண்டார். தமது வாழ்வின் பூர்த்திக்காக எண்பத்தாறாவது வயதில் சிதம்பரம் சென்றார். மார்கழிமாத திருவெம்பாவைக் காலம் இதுவாகும். ஆனந்தத்தின் மேல் ஆனந்தம் அவர் உள்ளத்தில் பெருகி வழிந்தது. "அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே" என்ற அடிகளைப் பலமுறை பாடினார். ஆருத்திரா தரிசனத்தை மனம் போல கண்குளிரக் கண்டு மகிழ்ந்தார். இந்தப் பிறப்பிலிருந்து ஓய்வெடுக்கும் நேரம் நெருங்கிவிட்டது. அடுத்துவரும் சிவராத்திரி தினத்தில் ஈசன் பொற்கழல் எனும் கனியை மாந்திக் கொண்டு நடராஜப் பெருமானின் திருவடிகளை சிக்கெனப் பிடித்து பூத உடம்பை நீத்தார். அம்மையாரின் வாழ்வு இலட்சிய வாழ்வு; பயனுள்ள வாழ்வு; எமக்கெல்லாம் வழிகாட்டும் வாழ்வு; தவ வாழ்வு; என்று விரித்துக் கொண்டே போகலாம். அப்படி விரிப்பின் பெருகும் என்றஞ்சி இத்துடன் நிறுத்துகிறேன்.

# வாழ்த்துகிறோம்

## துர்க்காபுரம் மகளிர்இல்ல மாணவிகள்

## பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் – 2012 A/L

**அம்பாளின் திருவருளாலும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் தெய்வீகத்தாலும் எமது இல்ல மாணவிகள் சிறப்புடன் விளங்குகிறார்கள்.**



**செல்வி. செல்வதியம்மா பூலோகம்**
( கலைத்துறை – தமிழ் )
யாழ். பல்கலைக்கழகம்



**செல்வி. விதுஷாயினி பாலச்சந்திரன்**
( கலைத்துறை – மெய்யியல் )
யாழ். பல்கலைக்கழகம்




**செல்வி. சர்வலோஜினி நாகேந்திரம்**
( கலைத்துறை – மெய்யியல் )
மட்டக்களப்பு பல்கலைக்கழகம்

PUBLIC LIBRARY
JAFFNA


## மட்டக்களப்பு மயிலம்பாவெளி
## ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான தலவிருட்சம்




## பாடசாலை



## மட்டக்களப்பு மயிலம்பாவெளி
## ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான சிவாச்சாரியார் இல்லங்கள்




## விடுதிச்சாலை



## சிறுவர் இல்லம்




## திருக்குளம்



# குருதி அழுத்தம் (Blood pressure)

**Dr. S. டிசியந்தி அவர்கள்**
*துர்க்காதேவி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை*

குருதியானது இரத்தக் குழாய்களி னூடாகப் பயணிக்கும்போது அதன் சுவர்களில் ஏற்படும் அழுத்தமே குருதி அழுத்தம் எனப்படும்.

இந்த அழுத்தமான இதயத் தசைகள் சுருங்கும் போது ஏற்படும் அழுத்தமானது இதயத் தசைகள் விரியும் போது ஏற்படும் அழுத்தத்தைவிட அதிகமாக இருக்கும். சாதாரண ஒருவரில் குருதி அழுத்தம் இதய தசைகள் சுருங்கும்போது 120 மில்லிமீற்றர் பாதரச அழுத்தமாகவும் இதய தசைகள் விரியும்போது 80 மில்லி மீற்றர் பாதரச அழுத்தமாகவும் இருக்கும். இதனையே 120/80 mmHg எனக் குறிப்பிடப்படும். எனினும் இந்த அள வானது சற்று கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படுமிடத்து உட னடியாக அல்லது நோயாளியாகக் கருத முடியாது. 2 அல்லது 3 தடவைகள் குருதி அழுத்தமானது சோதிக்கப்பட்ட பின்னரே சாதாரண ஒருவரோ அல்லது நோயாளியோ என்பதனை முடிவு செய்யமுடியும். அத்துடன் வயது, பால் என்பவற்றுடன் சற்று அதி கரித்தோ, குறைந்தோ காணப்படுவது சாதாரணமாகும். எனவே இவற்றை வைத்தியர் ஒருவராலேயே தீர்மானிக்க முடியும்.

குருதி அழுத்தமானது உயர்வாக இருப்பதும் தாழ்வாக இருப்பதும் பாதிப்பை ஏற்படுத்தும்.

## I) உயர் குருதி அழுத்தம் (Hypertension) High Blood pressure

இருவகைப்படும்.

1. முதன்மையானது (Primary)
2. இரண்டாவது / Secondary

- ♦ முதலாவது எனும்போது வேறு எதுவித நோய்நிலைகளும் இல்லாத போது குருதி அழுத்தமானது அதிகரித்த நிலையாகும்.

**இதற்கான காரணங்கள்**

- ♦ புகை பிடித்தல், மது, போதைப் பொருட்களைப் பாவித்தல்,
- ♦ வாழ்க்கைப்பழு (Stress)
- ♦ உடற்பருமன் அதிகரித்தவர்கள்.
- ♦ உணவில் அதிக உப்பு பயன்படுத்து பவர்களில் ஏற்பட வாய்ப்பதிகம்.

இரண்டாவது எனும்போது வேறு ஏதாவது நோய்நிலைகளைத் தொடர்ந்து குருதி அழுத்தமானது அதிகரித்தல் என்பதாகும்.

அதாவது குருதிக் குழாய்ச் சுவர்களில் கொழுப்புப் படிந்து குழாய் குறுக லடைதல், குழாய் சுவரின் மீள்தன்மை இழத்தல் போன்றவற்றால் ஏற்படுகிறது.

உ-ம் : இருதய நோய்கள் (Coronary Heart disease), சிறுநீரக நோய்கள், சலரோகம் (Diabetic), அதிகளவு தைரொயிட், அதிரினல் சுரப்பியில் கட்டி போன்றன.

உயர் குருதி அமுத்தமானது பெரும்பாலானவர்களில் நோய் குறிகுணங்களை வெளிக்காட்டுவதில்லை. கூடுதலாக அதிகரித்த பின்னர் / வேறு நோய்களிற்கு மருந்து எடுப்பதற்காகச் செல்லும்போது வைத்தியரினால் சோதித்து அறியப்படுகிறது. எனவே இதனை அமைதியாக வரும் கொலையாளி (Silent killer) எனக் குறிப்பிடப்படுகிறது.

**குணங் குறிகளாக**

- ♦ தலையிடி
- ♦ வியர்த்தல் அதிகமாக இருத்தல்.
- ♦ விரைவான நாடித்துடிப்பு
- ♦ விரைவில் மூச்சிரைப்பு
- ♦ தலைசுற்றல்
- ♦ பார்வை தெளிவின்மை
- ♦ கழுத்தின் பின்பகுதியில் (பிடரி) நோ போன்றவற்றில் ஒன்றோ பலவோ காணப்படலாம்.

இவை காணப்படுமிடத்து வைத்தியரை நாடிச் சென்று அறிவுரை பெற்றுக் கொள்வதனால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விலகிக்கொள்ள முடியும். அலட்சியம் செய்வதனால் பாரதூரமான விளைவுகளை (உ-ம்) பாரிசவாதம் எதிர்நோக்க நேரிடும்.

**அறிவுரைகள் :**

1. மாதம் ஒரு தடவையாவது வைத்திய ஆலோசனை பெறல். கிளினிக்கினை தவறாது பயன்படுத்துதல்.
2. உப்பு உணவினைக் குறைத்தல் அல்லது தவிர்த்தல்.
3. கொழுப்பு அதிகம் உள்ள உணவுகள், தேங்காய்ப்பால் பொருட்கள் இறைச்சி வகைகளைத் தவிர்த்தல், பால் எடுப்பின் நன்றாகக் காய்ச்சி ஆறவிட்ட பின்னர் ஆடை அகற்றி பருகுதல். கோழி இறைச்சியை மட்டும் குறைந்தளவில் பயன்படுத்தலாம்.
3. மாப்பண்டங்களை குறைந்த அளவில் பயன்படுத்துதல்.
4. நார்ச்சத்துள்ள உணவுகள், தானியங்கள், அவரைக்குடும்ப தாவர உணவுகள் என்பவற்றை அதிகமாக உண்ணுதல்.
5. தினமும் இலைக்கறி வகைகள், மரக்கறிகள், பழவகைகள் என்பவற்றை அதிகளவில் உணவில் சேர்த்துக்கொள்ளல்.
6. உடல் நிறையைக் குறைத்தல்.
7. உடற்பயிற்சி.
8. போதியளவு நித்திரை / தூக்கம் இரவில் ஏற்படுத்துதல்.
9. தியானம், யோகாசனம் என்பவற்றினால் மன உளைச்சல், வாழ்க்கைப்பழு என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளல்.
10. புகைத்தல், மது போதை என்பவற்றைத் தவிர்த்தல்.
11. வெண்தாமரைப் பூவில் குடிநீர் செய்து பருகுதல்.
12. உள்ளி, வெந்தயம், வெங்காயம் என்பவற்றை தினமும் சாப்பாட்டிலோ அல்லது வெறுமையாகவோ உட்கொள்ளல்.
13. கறிவேப்பிலை அண்ணளவாக 4/5 கூட்டிலைகளை தினமும் சாப்பாட்டில் அல்லது பச்சையாக துவையல் செய்து உட்கொள்ளல்.
14. பசன்புருட் இலையினை துவையல் அல்லது வறை செய்து உட்கொள்ளல்.
15. சாறணை கீரையினை சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளல்.
16. நீற்றுப்பூசனி, வத்தகை, கெக்கரிக்காய் போன்றன வாரத்தில் நான்கு தடவைகளேனும் உட்கொள்ளல்.

**தாழ்வான குருதி அமுத்தம்** (Hypotension)

Low Blood pressure

அதாவது உடல் உறுப்புகளிற்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைவாக இருத்தல்.

**காரணம்**

1) இரத்தத்தின் அளவு (Volume) குறைதல்.
   உ–ம் : இரத்தப்பெருக்கு Dehydration
2. இருதயத்தின் பாதிப்புகள்
   உ–ம் : Heart attact cardiomyopathy
3. நாடிகளின் சுவரின் தன்மை (tension) குறைதல்.
4. மருந்துகளின் தொடர் பாவனை / தவறான பாவனை
   உ–ம் : வைத்திய ஆலோசனை இன்றி தொடர்ச்சியாகப் பயன்படுத்தல்.
   மன அழுத்த மாத்திரைகள்
5. கிருமித் தாக்கங்கள்
   உ–ம் : சிறுநீரக கிருமி
   இரத்தத்தில் கிருமி

**குணங்குறிகள்**

- சோர்வு, தலைச்சுற்று, மயக்கம், நிலை மாற்றத்தின்போது (இருத்தல், எழும்பல், படுத்தல்) தலைச்சுற்று.
- கண் மங்கலடைதல்.
- நெஞ்சு படபடப்பு
- களைப்பு
- தாகம் என்பவற்றில் ஒன்றோ பலவோ ஏற்படுகிறது. இவ்வாறான நிலையில் வைத்திய ஆலோசனையைப் பெற்று அதன்படி கைக்கொள்ள வேண்டும்.

இல்லாதவிடத்து இருதய ரோகம், சிறுநீரகம் பாதிப்படைதல் (Kidney failure), கைகால்கள் செயலிழத்தல், அதிர்ச்சி (Shock) என்பன ஏற்பட்டு பாரிய விளைவை ஏற்படுத்தும்.


**அறிவுரைகள்**

1. நீராகாரங்களை அதிகளவில் எடுத்தல்.
2. நீர் பருகுதலை அதிகரித்தல்.
3. உணவில் உப்பின் அளவை ஓரளவு அதிகரித்து உட்கொள்ளல்.
4. இலைக்கறி வகைகள், பழவகைகள், சூப் வகைகள், கஞ்சி வகைகள் பயன்படுத்துதல்.
5. பேரீச்சம்பழத்தினை தினமும் 3/4 உட்கொள்வது சிறந்தது.

மேற்கூறப்பட்டவற்றைக் கைக்கொள்வதுடன் அவ்வவ் வேளைகளில் வைத்திய ஆலோசனையைப் பெற்று குருதி அமுத்தத்தினை சாதாரண நிலையில் பராமரித்து சுகதேகிகளாக வாழ்வோமாக.

# பண்பாற் பழுத்த பார்வதிநாதசிவம்

கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் (கனடா)



புலவர் ம.பார்வதிநாதசிவம் அவர்கள் தமது 77ஆவது அகவையில் மார்ச் மாதம் 4ஆம் நாள் இறைவனடி எய்திவிட்டார். ஒரு பெரிய புலவர் பரம்பரை விழுது விழுந்துவிட்டது.

இவரது பேரனார் புகழ்பெற்ற அறிஞர் மட்டுவில் க.வேற்பிள்ளை. நூல்களுக்கு இவர் உரைசொல்லும் சிறப்பையும் வல்லமையையும் பாராட்டி வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள் வழங்கிய உரையாசிரியர் என்ற பட்டத்தைப் பெற்ற சிறப்புடையவர். நாவலர் பெருமானின் தலைமாணாக்கர் என்ற மதிப்பு இவருக்கு உண்டு.

வேற்பிள்ளை அவர்கள் புலோலி சிவபாதசுந்தரனாரின் சகோதரியை மணம்புரிந்து ஐந்து ஆண்மக்களுக்குத் தந்தையாகினார். அவர்களில் ஒருவர் குருகவி மகாலிங்கசிவம். குருகவியின் மைந்தரே புலவர் பார்வதிநாதசிவம். புலவர் பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கற்றுப் பெற்றுக் கொண்ட பட்டதாரி இவர்.

1966ஆம் ஆண்டு மயிலங்கூடல் பிள்ளையினார் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகள் பரமேஸ்வரியைத் திருமணம் செய்ததைத் தொடர்ந்து மட்டுவில் மைந்தர் மயிலங்கூடலூர் மருகராயினார்.

பார்வதிநாதசிவம் அவர்களை முதன் முதலில் நான் சந்தித்தது ஓர் இலக்கிய அரங்கிலேதான். இருவரும் பல கவியரங்கம் மற்றும் தமிழ் விழாக்களில் பங்குபற்றி உள்ளோம். மிக நெருக்கத்தை ஏற்படுத்தியது கீரிமலை சிவநெறிக் கழகம்

எனில் மிகையாகாது. கழகம் கீரிமலை நகுலேசுவரக் குருக்களின் குழந்தை. குழந்தையின் ஆர்வலர்கள் ஒவ்வொரு மாதமும் கீரிமலை மடத்திற்கூடிச் சைவ தத்துவம் பேசுவர். நகுலேசுவரக்குருக்கள், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் நமசிவாயம் போன்ற பெருமக்கள் தலைமை வகிப்பர். அல்லதுசொற்பொழி வாற்றுவர். சமய தத்துவம் எனக்கு விளக்கம் பெற்றது அங்குதான்.

தமிழ் இலக்கியத்தில் அஃகி அகன்ற அறிவுடையவர் அவர். தமிழைக் கற்றுத் தானே அண்ணாமலைப் பல்கலைக்கழ கத்தில் புலவர் பட்டத்தையும் பெற்றார். அதனாலே அவருடன் பேசுகையில் மிகக் கவனமாகவே பலரும் தங்கள் கருத்தைத் தெரிவிப்பர். அவரும் தனக்கெல்லாம் தெரியும் என்று தம்பட்டம் அடிக்கும் ஆளல்லர். அடக்கமோ அடக்கம். அது மரபு வழியாலும், ஆழ்ந்தகன்ற அறிவாலும், அடைந்த அடக்கம். அதனால் அவரைக் கடக்க யாரும் கருதுவதில்லை. அதற்கு அவர் பழகும் பண்பும் ஒரு காரணம். அன்பாகவும், அடக்கமாகவும் அவர் உரையாடுகையில் சுவையான பண்புப் பழம் ஒன்றை அனுபவிப்பது போன்ற சுகம் சுரக்கும்.

மென்மையாகப் பேசுவார், மெது வாகவே நடப்பார். மிதிக்கும் காலடிப் புல்லும் வாழ்த்தும் புண்ணியவான். அவர் காலமான செய்தி அறிந்து கனடாவிலும் புலவரின் மகன் பாரதியுடன் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தேன். என்னை முந்திக்கொண்டு டாக்டர் கதிர் துரைசிங்கம் பாரதிக்கு அனுதாபம் தெரிவித்ததாகச் சொன்னார். சிறுநீர் தொடர்பான சிக்கலால் உங்கள் நண்பர் சிவனடி சேர்ந்துவிட்டார் என்று கவலைப் பட்டார் பாரதி. உங்கள் நண்பர் என்று அவர் சொன்னதும் எந்தன் கண்களும் கலங்கிச் சொரிந்தன.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?


புலவர் பல நூல்களின் படைப்பாளி. காதலும் கருணையும், இருவேறு உலகம், இரண்டு வரம் வேண்டும் என்பவை அவரது நூல்கள். இன்னும் ஒரு திங்கள், பசிப்பிணி மருத்துவன், மானம் காத்த மறக்குடி வேந்தன் ஆகிய கவிதை நூல்களினதும் தமிழ்ச் செல்வம் என்ற கட்டுரைத் தொகுதியினதும் ஆசிரியர்.

பார்வதிநாதம் என்ற மலர் ஒன்று புலவரின் பவளவிழாக் கொண்டாட்டத் தன்று வெளியிடப்பெற்றது. அவரது 77ஆவது பிறந்த நாளில் (14-01-2013) இலுப்பைமர நிழலின்கீழ் என்ற நூல் வெளியிடப்பெற்றது. இதில் அவர் பெரி யார் பலரைக் கண்டெடுத்த பேட்டிகளும், பல இலக்கியக் கட்டுரைகளும், ஒரு கவிதையும் இடம்பெற்றுள்ளன. புலவரின் உடல் மெலிவால் வீழ்ந்தது பகுபதம்; படைப்புகள் தமிழுடன் கலந்தது பகாப்பதம்; உயிர் தவத்தாற் பெற்றது சிவபதம்!

PUBLIC LIBRARY
JAFFNA

# சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் அவர்கள்

ம.பா. மகாலிங்கசிவம் அவர்கள்



நாவலர் என்றவுடன் எவ்வாறு ஆறுமுகநாவலரின் நினைவு வருகிறதோ, அவ்வாறே சைவப்பெரியார் என்றவுடன் சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனாரின் நினைவுதான் வரும். நாவலரின் பின்னர் நாவலரின் பணிகளான சைவசமயக் கருத்துக்களை விளக்கும் நூல்களை வெளியிடுதல், பிரசங்கங்கள் செய்தல், பாடசாலைகள் அமைத்தல், திருக்கேதீச்சர ஆலயத்தைப் புனரமைத்தல் என்பவற்றைத் தொடர்ந்து செய்தவர் சைவப்பெரியார்.

இவர் புலோலியைச் சேர்ந்த சுப்பிர மணியபிள்ளைக்கும் வள்ளியமைக்கும் மகனாக 17-01-1878இல் பிறந்தார். இவர் பிறந்த குடும்பம் சிறந்த கல்வியறிவு மிக்க குடும்பமாகும். தந்தையாரான சுப்பிர மணியபிள்ளைக்கு ஏழு சகோதரர்கள். அவர்களில் ஒருவரான கணபதிப்பிள்ளை திருவனந்தபுரம் மகாராஜாவின் சமஸ்தான வித்துவானாக இருந்தவர். அது மட்டுமன்றித் திருவனந்தபுரம் மகாராஜக் கல்லூரியிலும் சமஸ்கிருதப் பேராசிரியராக இருந்தவர். வடமொழியிலுள்ள இரகுவம்சம், பில்ஹணியம் என்னும் நூல்களை மணிப் பிரிவாள நடையில் மொழி பெயர்த்தவர்.

சுப்பிரமணியபிள்ளையின் மற்றைய சகோதரர் வ.குமாரசுவாமிப்புலவர், இலக்கண இலக்கியங்களில் வல்லவராக விளங்கியதுடன் சாதாரணமாகப் பேசும் போதும் இலக்கண மரபுப்படி பேசியதால் “இலக்கணக் கொட்டர்” என்று அழைக்கப் பட்டவர்.

சுப்பிரமணியபிள்ளையின் சகோ தரிகளில் ஒருவரே பார்வதி அம்மையார். இவர் வான்மீகத்தைச் சமஸ்கிருதத்தில் வாசித்து விளக்கம் சொல்வதிலும், தொல்காப்பியம் முதலிய இலக்கணங் களைக் கதை சொல்வது போற் கற்பிப் பதிலும் வல்லவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிலே தங்கப் பதக்கம் பெற்ற பண்டிதையான வாலாம்பிகை யைத் தமது கற்பித்தல் மூலம் உரு வாக்கியவர்.

இத்தகைய கல்விப் பாரம்பரியம் மிக்க குடும்பத்திலே தோன்றிய சிவ பாதசுந்தரனார், சிறு வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் வல்லவராக விளங்கி னார். இவருக்குத் தமிழ் கற்பித்தவர்

PUBLIC LIBRARY
JAFFNA

மாமியாரான பார்வதி அம்மையார். சிவபாதசுந்தரனார் தமது அகநூலைப் பார்வதி அம்மையாருக்கே காணிக்கை யாக்கி, அவரைத் தவச்செல்வி என்றும் போற்றியுள்ளார். புலோலி வேலாயுதம் பாடசாலையிற் கல்வி கற்ற சிவபாத சுந்தரனார் தமது ஆங்கிலக் கல்வியை அங்கேயே பெற்றுக்கொண்டார்.

பாடசாலைக் கல்வி நிறைவடைந்ததும் தந்தையார் மேற்படிப்புக்காக இவரை இந்தியாவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு இவரது சிறிய தந்தையார் கண பதிப்பிள்ளை பேராசிரியராக இருந்த திருவனந்தபுரம் மகாராஜாக் கல்லூரி யிலே கற்கச் செய்தார். இங்கு கற்ற காலத் திலே தமது சிறிய தந்தையாரிடம் சமஸ் கிருதத்தை ஐயந்திரிபறக் கற்றுக் கொண்டார்.

மகாராஜாக் கல்லூரியில் எப்.ஏ(F.A) வகுப்பிற் சித்தி பெற்ற பின்னர், திருச்சி சென்.யோசேப் கல்லூரியிலே கற்றுக் கலைமாணிப் (B.A) பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். கணிதம், தருக்கம் ஆகிய இரண்டும் இவரது பிரதான பாடங்கள் ஆகும். மேலை நாட்டுத் தத்துவ நூல்கள், தருக்க நூல்கள் என்பவற்றைக் கற்கும் வாய்ப்பு இவருக்கு இங்கேதான் கிடைத்தது.

தமிழ் நாட்டிலே பட்டம் பெற்று, யாழ்ப்பாணத்தின் முதற் சைவப் பட்டதாரி என்ற பெருமையுடன் இவர் யாழ்ப்பாணம் திரும்பி வந்தார். முதலிற் புலோலியில் உள்ள சைவப் பாடசாலையிலும் பின்னர் புலோலி வேலாயுதம் பாடசாலை, கொழும்பு பொன்னம்பலம் பள்ளி என்பவற்றிலும் கற்பித்து, திருகோணமலை சென்.யோசப் கல்லூரியிலும் அதிபராகப் பணியாற்றி னார். யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார். இறுதி யாக 1924ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வுபெற்ற 1933ஆம் ஆண்டு வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராகப் பெரும்பணி ஆற்றினார்.

அடுத்து அவரது சமயப் பணியாக, நாவலரின் வழியைப் பின்பற்றி, சைவ சமய உண்மைகளை மாணவர்களுக்கும், மக்களுக்கும் எடுத்துக் கூறப் பல நூல்களை எழுதினார்.

**சைவ மாணவர்களுக்கான நூல்கள்**

1. முதலாம், இரண்டாம், மூன்றாம் சைவ போதங்கள்.
2. திருவருட்பயன் உரை
3. திருக்குறள் மணிகள்
4. திருவாசக மணிகள்
5. சைவ சமய சாரம்
6. சைவ சமயத்தின் பெருமை
7. கிரிசாம்பாள் கதை
8. துளசித்தாமன் கதை

**சைவ மக்களுக்காய் எழுதியவை :**

1. சுப்பிரமணியப் பெருமானுடைய திருப்பெருவடிவம்
2. சைவக் கிரியை விளக்கம்.
3. கந்தபுராண விளக்கம்
4. அப்பர் சுவாமிகளின் தேவாரச் சிறப்பு.
5. கற்பிக்கும் முறைகளும் விதிகளும்

**சமயத்தோடு நேரடித் தொடர்பற்ற பட்டப்படிப்பு மாணவருக்காய் எழுதியவை.**

1. அக நூல்
2. அளவை நூல்

இவற்றுள் அளவை நூல் 1953ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழ கத்தால் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கு

அப் பல்கலைக்கழகத் தத்துவத்துறைத் தலைவர் ஆர்.இராமானுஜாச்சாரி முகவுரை எழுதியுள்ளார். அகநூல் 1935இல் சென்னையில் பதிக்கப்பட்டது.

The Saiva School of Hinduism என்னும்நூல் இலண்டனிலுள்ள அலன் அன்வின் என்னும் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டமை இந்நூலின் தரத்தை விளக்குகிறது. இது மேலைத் தேயத்தோருக்குச் சைவ சமய உண்மைகளை எடுத்துக் கூறுவது இந் நூலுக்குக் கார்டிப் பல்கலைக் கழகப் பேராசிரியரான மக்கென்சி என்பவர் அணிந்துரை வழங்கினார்.

சைவப் பெரியார் மேற்கொண்ட ஆலயப் பணிகளில் முக்கியமானது திருக்கேதீச்சரப் பணியாகும். திருக்கேதீச்சரம் புனருத்தாரணம் செய்யப்படவேண்டும் என்ற நாவ லரின் நீண்ட நாட் கனவை நிறைவேற்று வதற்காகப் பலரின் உதவியுடன் 1948இல் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையை நிறுவி அதன் தலைவராக 1952வரை பணியாற்றினார். தமதுமுதற் பணியாகச் செங்கற்களால் ஆக்கப்பட்டுச் சிறிய கோயிலாக இருந்த திருக்கேதீச் சரத்தைப் புதுப்பித்து 1952இலே கும்பாபி ஷேகம் நிகழ வழித் செய்தார். இங்கு வரும் அடியார்கள் தங்கிப் போக விசாலமான மண்டபத்தை அமைத்து அதற்குத் திருஞான சம்பந்தர் மடம் என்றும் பெயரிட்டார். சிவபெருமான் அம்பாள் ஆகியோரின் எழுந்தருளி விக்கிரகங்களையும் அன்பளிப்புச் செய்தார்.

இலங்கை அரசின் கல்வி ஆலோசனைச் சபை, கன்னங்கரா கல்வி விசாரணைச் சபை என்பவற்றிலும் சைவப் பெரியார் அங்கத்தவராய் இருந்தார். 1928ஆம் ஆண்டு தொடக்கம் 1930ஆம் அண்டு வரை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். 1930ஆம் ஆண்டு திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற யாழ்ப்பாண வாலிபர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். இம் மகாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சம ஆசனம், சம்பந்தி போசனம் என்பவை ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. இது உயர் குடியினரிடையே சலசலப்பை ஏற்படுத்திய தாற் பல்வேறு குழப்பங்களும் செய்யப் பட்டன. எனினும் தனது முயற்சியிலே தளராத சைவப் பெரியார் தலைமையுரையிலே, வருணாச்சிரம தர்மம் தொழிலை அடிப்படையாகக் கொண்டமைந்தது. அதிலே தீண்டாமைக்கு இடமில்லை என்னும் கருத்தை வலியுறுத்திக் கூறினார்.

விக்ரோறியாக் கல்லூரியிற் கற்பித்த காலத்திலே சுழிபுரத்தைச் சூழ உள்ள பகுதிகளில் சைவப் பள்ளிகள் நிறுவு வதில் ஈடுபட்டார். இவ்வகையில் மூளாயில் கந்தையா உபாத்தியாரிடம் தனது கருத்தைத் தெரிவித்து மூளாய் சைவப்பிரகாசப் பாடசாலையைக் கட்டுவித்தார். அதுமட்டுமன்றி தனது உறவினர்களான ஆசிரியர் தம்பு, பண்டிதர் ம.வே. மகாலிங்க சிவம் போன்றவர்களை ஆசிரியர்களாகவும் அனுப்பினார். கொச்சிக்கடை பொன்னம்பலம் பாடசாலை யிலே தலைமை ஆசிரியராக இருந்த காலத்திலே இவர் கேட்டுக் கொண்ட தன்படியே சேர்.பொன் இராமநாதன் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு நாவலர் அடிச் சுவட்டிற் சைவப் பணி புரிந்து சைவ வாழ்வு வாழ்ந்த சைவப் பெரியார் 14-8-1959இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## சிறுவர் விருந்து

# பொய்மை அழிக்கும் புண்ணியன்

- சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே!

திருநள்ளாறு என்ற சிவத் தலத்திலேதான் நளமகாராசன் தனது சனிதோசத்தைப் போக்கிக் கொண்டான் என்பது வரலாறு. திருநள்ளாற்றில் உள்ள சனிபகவான் சந்நிதி மிகவும் சாந்நித்தியம் உள்ளது. சனி தோசம் உள்ளவர்கள் இன்னும் கூட நள்ளாற்றில் உள்ள சனிபகவானுக்கு நேர்த்திகள் வைத்து, திருநள்ளாற்று இறைவனைப் புகழும் தேவாரங்களைப் பாடி வழிபடுவது வழக்கம்.

இந்த நள்ளாறப்பர் கோயிலே இன்னும் ஒரு சிறந்த சந்நிதி உள்ளது. ராஜகோபுரத்திற்குத் தென்புறம் ஒரு சிறு இடையனார் கோயில் உள்ளது. அதற்கு ஒரு சுவையான தனிக்கதை உள்ளது.

முன்னொரு காலத்திலே அரசன் கட்டளைப்படி இடையன் ஒருவன் கோயிலுக்குப் பால் கொடுத்து வந்தான். அபிடேகம், நெய்வேத்தியத்திற்காகக் கொடுக்கும் அந்தப் பாலின் பெரும்பகுதியைக் கணக்குப் பிள்ளை தன் வீட்டிற்கு அனுப்புவதை வழக்கமாகக் கொண்டான். கணக்குப் பதிவேட்டிலே பொய்க்கணக்கைப் பதிந்து வைத்தான்.

கோயில் பூசகர் சிலருக்கும், இடையனுக்கும் இந்த நிகழ்ச்சி தெரிந்துவிட்டது. ஆனால் அடாவடிக்காரனான கணக்குப்பிள்ளை அவர்களைப் பயமுறுத்தி, அவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அடக்கி வைத்து விட்டான். அவனுடைய பாதகச் செயலுக்குப் பயந்த அவர்களும் வாய்மூடி மௌனமாக வருந்திக் கொண்டிருந்தனர். தற்செயலாக அரசன் ஒருமுறை கோயிலுக்கு வந்த பொழுது சில உண்மைகளை அறிந்து கொண்டான். கோபங்கொண்ட அரசன் கணக்குப் பிள்ளையிடம் கணக்கு வழக்குப் புத்தகங்களைப் பார்வையிட வேண்டும் என்றான்.

கணக்குப் பிள்ளையும் தான் சாமர்த்தியமாகத் தயாரித்த பொய்க் கணக்குகளைக் காட்டினான். அரசனுக்கோ சந்தேகம். கணக்குப் பிள்ளையின் பாதகச்செயலை எப்படி நிரூபிப்பது என்று யோசித்தான். நள்ளாறப்பரைப் பிரார்த்தித்தான்.

திடீரென திருநள்ளாறப்பர் திருக் கரத்திலிருந்து திரிசூலம் மின்னலைப் போலப் பாய்ந்து வந்து கணக்குப் பிள்ளையின் மார்பில் தைத்தது. கணக்குப்பிள்ளை பதைபதைத்துத் தரையில் சாய்ந்தான். தன் தவறு களைத் திக்கித் திணறியபடி ஒப்புக் கொண்டு உயிர்விட்டான்.

அரசனும், மக்களும், அந்தணர் களும் நள்ளாறப்பரின் இந்த நீதிகாத்த திருவருட் செயலை நேரில் கண்டு "ஹர ஹர" என்று மெய்மறந்து போற்றித் தொழுதார்கள்.

திருநள்ளாறு மூலத்தானத்தின் முன் உள்ள நந்தியும்கூட பாய்ந்து வந்த திரிசூலத்தைப் பார்த்து ஒரு பக்கம் சாய்ந்து வழிவிட்டபடியே இன்றும் உள்ளது.

இடையனார்கோயிலில் இடையன், அவன் மனைவி, கணக்குப் பிள்ளை ஆகியோரின் சிலைகள் உள்ளன.


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு


**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# இதய அஞ்சலி

## மானிப்பாய் அமரர் மார்க்கண்டு கிரிதரன்

### (தொழிலதிபரி - விமாகி நிறுவனம்)



எங்கள் தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவரும், இடப்பெயர்வு வேளை எமது துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளை நேசித்து, தங்கள் இல்லத்தில் பிள்ளைகள் சில காலம் தங்குவதற்கு பெருந்துணை செய்த வரும், எங்கள் தேவஸ்தானத்தின் பெருந் தலைவராக விளங்கிய அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் பிரியத்துக்குரிய தொண்டராக விளங்கிய அன்பர் கிரிதரனின் பிரிவு குறித்து எமது தேவஸ்தானம் மிகுந்த வேதனை யடைகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்காதேவியைப் பிரார்த்தித்து இதய அஞ்சலிகளைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**சைவக் களஞ்சியம் நூல் வெளியீடு**

மூதறிஞர், காரைநகர் பண்டிதர் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களால் தொகுக்கப் பட்ட சைவக் களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா 20-04-2013 அன்று காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் நடை பெற்றது. உயர்திரு.ப.விக்கினேஸ்வரன் (உதவிச் செயலர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு) தலைமையில் நடை பெற்ற விழாவில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு, தேவஸ்தான அறங் காவலர் திரு.க.சோமசேகரம் J.P. உட்பட பலரும் உரையாற்றினர்.

**கீரிமலை காசி விஸ்வநாதர் கோவிலுக்கு அடிக்கல்**

போரினால் சேதமுற்ற கீரிமலை தீர்த்தக்கரை காசி விஸ்வநாதர் கோவிலை மீளவும் கட்டியெழுப்பும் பணி மகாராஜஸ்ரீ ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் தலைமையில் அடிக்கல் நாட்டப்பெற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தெல்லிப்பழை காசிவிநாயகர் கோவில் பாலஸ்தாபனம்**

பிரசித்திபெற்ற தெல்லிப்பழ காசிவிநாயகர் ஆலயம் 11-04-2013 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. புதிய திருப்பணி வேலைகள் நிறைவு செய்து விரைவில் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

**குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியா லயம் புதிய மண்டபம் திறப்பு விழாவும் சைவ சமய எழுச்சி விழாவும்**

15-04-2013 அன்று வெளிநாட்டில் வாழும் குப்பிளான் மக்களின் உதவியால் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப் பட்ட மண்டபம் அதிபர் திரு.குணரட்ணம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத்திலிருந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்கள் திருமுறை பாராயணத்தோடு ஊர்வலமாக மாண வர்கள், ஆசிரியர்கள், ஊர்மக்கள் சகிதம் பங்குபற்ற விழா ஆரம்பிக்கப் பட்டது.

**மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்துசமய பாட கருத்தரங்கு**

மட்டக்களப்பு மாவட்ட இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் மூன்று நாள் வதிவிடக் கருத்தரங்கு 16-04-2013 முதல் 18-04-2013 வரை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

**மட்டக்களப்பு மயிலம்பாவெளி ஸ்ரீ காமாட்ஷி அம்பாள் ஆலயம்**

புதியதோர் சரித்திரம் படைக்கும் இத் திருக்கோவிலைத் தரிசித்தவர்கள் மெய்மறந்து வழிபாடு செய்வதைக் காணலாம்.

- சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்ஆலயம் அமைந்துள்ளது.

- சுவாமி இராமதாஸ் அறக்கட்டளை நிறுவனத்தின் பெயரால் சிறுவர்களுக்கான "கருணாலயம்" இல்லம் அமைக்கப்பட்டு சிறப்பாக இயங்குகிறது.
- மிகப்பெரிய "செம்லகாரணயம்" என்ற பெயரில் நந்தவனம் அமைக்கப்பட்டு பூசைக்குரிய மலர்கள் பெறப்படுகிறது.
- பெரிய குளம் வெட்டப்பட்டு அருகே சூரியபகவான் பெரிய சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. நன்னீர் பாதுகாப்புக்காக குளம் அமைக்கப்பட்டுள்ளது.
- அழகான சித்திரத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது.
- சிவாச்சாரியார்கள், துறவிகள் தங்குவதற்கு அழகான வீடுகள் கட்டப்பட்டுள்ளது.
- சைவ உணவுச்சாலையும், பொருள் விற்பனை நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

**மாங்குளம் பெரிய புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஸ்ரீ கதிர்காமசுவாமி கோவில் கும்பாபிஷேகம்**

24-04-2013 அன்று பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தரசெந்தில்ராஜ சிவாச்சாரியார் அவர்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**நீர்வேலி கந்தசாமி கோவில் புதிய வாயில் மணி மண்டபம்**

பிரசித்திபெற்ற நீர்வேலி கந்தசாமி கோவில் வாயிலில் அழகான புதிய மணிமண்டபம் பல லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. திருத்தேர்த் திருவிழா 24-04-2013 அன்று சிற்பக்கலைஞர் கௌரவிக்கப்பட்டார்.


**இணுவில் செகராஜசேகரப் பிள்ளையார் கோவில் முருகன் திருத்தேர்**

இணுவில் செகராஜசேகரப் பிள்ளையார் கோவில் முருகப் பெருமான் வீதியுலா வருவதற்கு புதிய தேர் உருவாக்கப்பட்டு 22-04-2013 அன்று வெள்ளோட்ட விழா நடைபெற்றது. சிற்பக் கலைஞர் தாவடி ஐயாத்துரை அவரது புதல்வர்களால் உருவாக்கப்பட்ட இத்திருத்தேர் அமரர் பண்டிதர் இ.திருநாவுக்கரசு குடும்பத்தவர்களின் தனி உபயமாக உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மட்டக்களப்பு மயிலம்பாவெளி ஸ்ரீ காமாட்ஷி அம்பாள் ஆலய தேர் வெள்ளோட்டம்**

மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் மிகப்பெரிய காமாட்சி அம்மன் கோவில் கட்டப்பட்டு, ஆலயச் சூழலில் பல்வேறு அறப்பணிகள் நடைபெற்று வருகிறது. சுவாமி இராமதாஸ் அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் கருணாலயம்என்னும்பெயரில் சிறுவர் இல்லம், நந்தவனம், குடியேற்ற இல்லத்திட்டம் சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற 17-04-2013 அன்று சித்திரத்தேர் வெள்ளோட்டம் இடம் பெற்றது.

## முழங்காவில் கிருஷ்ணன் கோவில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினர்





# மட்டக்களப்பு மயிலம்பாவெளி
# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்






திருக்கோவில் நந்தவனம்

ANDRA DIGITAL PRINTERS T.P : 021 222 8929